பக்கங்கள்:14 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 07 செவ்வாய்க்கிழமை 23.11.2021 கதிர் 18

# இனி அது ரகசியம் அல்ல!

'சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்த மாதிரி' என்று ஒரு பேச்சு மொழி உண்டு. விளங்காத விடயத்தை இப்படி விளக்குவர்.

கோட்டா அரசின் பசுமை விவசாயக் கொள்கை அப்படிக் குழப்பமாகத்தான் இருக்கின்றது.

அவரது ஜனாதிபதி பக்கம்02

# விரைவில் பஸில் புதுடில்லி பயணம்

## பிரதமர் மோடியைச் சந்திக்க

கொழும்பு, நவம்பர் 23

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியுடன் இருதரப்பு உறவுகள் குறித்துப் பேசுவதற்காக இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் விசேட பிரதிநிதியாக அவர்கள் இருவரினதும் இளைய, சகோதரரான நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை புதுடில்லிக்கு அனுப்புவதற்கு கொழும்பு ஆட்சிப்பீடம் தீர்மானித்திருப்பதாக சில செய்தி வட்டாரங்களில் இருந்து தகவல் கசிந்துள்ளது. 2

# கடலில் குதித்த பாசையூர்வாசி கரை திரும்பாமையால் பதற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ. 24

மண்டைதீவிற்கு அண்மையில் உள்ள பூவசரந்தீவை ஒட்டி கடற்கரையில் நேற்று முன்தினம் கஞ்சாப் பொதிகளுடன் படகில் பயணித்தவர் என்று கருதப்படும் பாசையூரைச் சேர்ந்த ஒருவரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

22 ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் கரையை அண்மித்த சமயம் கடற்படையினர் மறைந்திருந்து மடக்கிப் பிடிக்க முற்பட்டபோது, கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகில் பயணித்தவர் கடலில் குதித்துள்ளார்.

இன்று அதிகாலை 2

# கொரோனாச் சாவு சடுதியாக உயர்வு

## ஒரே நாளில் 31 பேர் சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 31 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரசதகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 158 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சாவடைந்த 31 பேரில் 21 2

# 'பட்ஜட்'டின் இரண்டாம் வாசிப்பு 153 வாக்குகளால் நிறைவேற்றம்

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 93 மேலதிக வாக்குகளால் நிறைவேறியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று மாலை நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில், 153 பேர் ஆதரவாகவும், 60 பேர் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

நிதி அமைச்சரான பஸில் ராஜபக்ஷவால் கடந்த 12 ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதன் இரண்டாம் 2


## 'பட்ஜட்'டை ஆதரித்து வாக்களித்த

# ரிஷாத்தின் கட்சி எம்.பிக்கள் கட்சியிலிருந்து இடைநிறுத்தம்

கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான முதலாவது வாக்கெடுப்பிலும் இறுதி 2

## மந்திகையில் இடம்பெற்ற விபத்தில்



# மைக்கல் விளையாட்டுக்கழக இளம் வீரர் பரிதாப உயிரிழப்பு

யாழ். வடமராட்சியில் இடம்பெற்ற கோர விபத்தில் மைக்கல் விளையாட்டுக்கழக இளம் வீரர் பரிதாபகரமாக உயிழந்துள்ளார்.

மந்திகையில் நேற்றிரவு 8 மணியளவில் இடம்பெற்ற விபத்திலேயே அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். 2

# பனையால் தவறி விழுந்த சீவல் தொழிலாளி மரணம்

யாழ்., வடமராட்சியில் பனையால் தவறி விழுந்த சீவல் தொழிலாளி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த ந.ஜெயராசா (வயது 48) என்பவரே 2

# யாழ்.அரச அதிகாரிகள் பலருக்கும் இடம்மாற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.22

யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் பலருக்கு கூண்டோடு இடமாற்ற உத்தரவு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் இருந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தற்போதைய யாழ்ப்பாணம் 2

# பொலித்தீன் பிரேத உறைகள் கொள்வனவிலும் நிதி மோசடி?

## யாழ்.ஆஸ்பத்திரியில் இன்று விசாரணை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.23

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத உறை கொள்வனவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில் இன்றைய தினம் உள்ளக விசாரணை ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணக் 2

# நேற்று 735 பேருக்கு கொரோனா உறுதி

நாட்டில் மேலும் 735 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் இது வரை அடையாளம் 2

# அமைச்சர் காமினிக்கு கொரோனாத் தொற்று



மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகேயுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர் சிகிச்சைக்காக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்வாறம் அவர் நாடாளுமன்றக் 2



# 'காலைக்கதிர்' ஸ்தாபக ஆசிரியர் கானமயில்நாதன் நம்மைப் பிரிந்தார்

இலங்கையின் மூத்த தமிழ் பத்திரிகையாளரும் 'காலைக்கதிர்' நாளிதழின் ஸ்தாபக ஆசிரியரும் பிரதம ஆசிரியருமான ம.வ.கானமயில்நாதன் (வயது 79) நேற்று விடிகாலை காலமானார் என்ற தகவலை மனவருத்தத்துடன் தமிழ் கூறும் நல்லுலகுக்கு அறியத் தருகின்றோம்.

மூப்பு, தளர்ச்சி, நோய் காரணமாக சில வருடங்கள் ஊடகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்த 2



'காலைக்கதிர்' மலர்வினை ஒட்டிய 'விடியல் வீச்சு!' நாளிதழை அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் வெளியிட, வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முதல் பிரதியைப் பெறுகின்றார். அருகில் 'காலைக்கதிர்' நாளிதழின் ஸ்தாபக ஆசிரியர் ம.வ.கானமயிலநாதன்.

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உணர்த்தியது.

செயலகம் நேற்று ஓர் அறிக்கை வெளியிட்டது. அதில் –

“சேதன உரத்துக்கு மாத்திரமே இனி அரச நிவாரணம் கிட்டும். சேதனப் பசளை விநியோகம், நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் அனைத்தும் சேதன விவசாயத்துக்கு மாத்திரமே முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்” – என்றிருந்தது.

இதன் அர்த்தம் என்ன என்று கொழும்பில் ஊடக வட்டாரங்களைக் கேட்டேன்.

“அது தெளிவானது. சேதன இரசாயன விவசாயத்துக்கு மட்டுமே அரசின் நிவாரண உதவித் திட்டம் கிடைக்கும். அசேதன அல்லது இரசாயன உரங்களை இனி யாரும் இறக்குமதி செய்யலாம். ஆனால் அதனைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு அரசின் மானிய உதவிகள் கிட்டாது.” – என்பதுதான் அர்த்தமாம்.

அசேதன – இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்க மாட்டோம் என்று உடும்புப் பிடியாக நின்றவர்கள், இப்போது விவசாயிகளின் கடும் எதிர்ப்பால் நிலைகுலைந்து போனார்கள். அந்த இறுக்கமான முடிவிலிருந்து இறங்கி விட்டார்கள். ‘விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று காட்டுவதற்காக’ இப்படி புறவளத்தினால் கயிறு விடுகின்றார்கள்” – என்று கொழும்பு ஊடக வட்டாரங்கள் தெரிவித்தன.

“இரசாயன – அசேதன – உரங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கின்றோம் என வெளிப்படையாக அறிவிக்கத் திராணியில்லாதவர்கள், இனி சேதன விவசாயத்துக்கே – பசுமை விவசாயத்துக்கு மாத்திரமே – அரச நிவாரணம் கிட்டும் என்று அறிவிக்கின்றார்கள். அதாவது அசேதன உரங்கள், இரசாயனங்கள், களை கொல்லிகள், கிருமிநாசினிகளை யாரும் இறக்குமதி செய்யலாம். அதைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு அரச நிவாரணம் கிடைக்காது” – என்பதுதான் விளக்கம்.

அதாவது முன்னைய மாதிரி யூரியா போன்றவற்றை விவசாயிகள் இறக்குமதி செய்து பயன்படுத்த முடியும். ஆனால் அந்த யூரியா முன்புபோல அரசினால் நிவாரண விலையில் அது வழங்கப்பட மாட்டாது. அரசு அதனை இறக்குமதி செய்யவும் மாட்டாது. தனியார் இறக்குமதி செய்யலாம். அவர்கள் விற்கும் விலையில் விவசாயிகள் வாங்கிப் பயன்படுத்தலாம். – என்பதுதான் நிலைமை.

அதாவது, இதுவரை விவசாயத்துறைக்குத் தான் வழங்கி வந்த “பெரியளவு நிவாரணத்தை” பசுமை விவசாயத்தை ஊக்குவிக்கின்றோம் என்ற பெயரில் மெல்ல வெட்டிவிட்டது அரசு. அவ்வளவுதான்!

சரியோ, பிழையோ, இனி இந்த நாட்டில் அசேதன உரங்கள், இரசாயனப் பசளைகளுக்கு இடமேயில்லை என்று சூளுரைத்து விதண்டாவாதம் பண்ணிய, ஆட்சித்தலைமை, பெரும்போகம் குழம்பி, விவசாயிகள் வீதியில் நிற்கும் நிலையை ஏற்படுத்தி விட்டு, தன் பிடிவாதத்தை விலக்கி, கீழிறங்கியிருக்கின்றது.

வறட்டுப் பிடிவாதத்தை விட்டுக் கொடுத்து, நேரத்துடனனேயே இந்த முடிவுக்கு அரசு வந்திருந்தால் பல குழப்பங்கள், சிக்கல்கள்,பின்னடைவுகள் இப்படி ஏற்பட்டிருக்க மாட்டா.

எல்லாவற்றையும் குழப்பிக் குட்டிச் சுவராக்கி விட்டது கோட்டாபயவின் இராணுவப் பிடிச்சுராவித்தனம். எல்லா மரக்கறி வகைகளின் விலையும் சராசரியாக கிலோ ஐந்நூறைத் தாண்டிய நிலையில், வேதாளம் முருங்கை மரத்தில் இருந்து கீழிறங்கிய மாதிரி உரத்தடை விடயத்தில் பதுங்கிக் கொண்டு இறங்குகின்றது இதுவரை மீசையை முறுக்கிக் கொண்டிருந்த இராணுவப் பாணி ஆட்சி.

அப்படி இறங்கிய முடிவையும் கூடத் தெளிவாக அறிவிக்கும் முதுகொலும்பு – திராணி – கோட்டாப ஆட்சிப் பீடத்துக்கு இல்லை என்பதுதான் விசனத்துக்குரிய உண்மை.

இந்த ஆட்சிப் பீடத்தின் பல பிடிவாதத் தீவிரப் போக்குகளின் முடிவு, இப்படித் தான் கடைசியில் புஸ்வாணமாகிப் போகும். இருந்து பாருங்கள்.

– மின்னல் –

## ‘பட்ஜட்’டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாசிப்பு மீதான குழுநிலை விவாதம் 13ஆம் திகதி முதல் இன்று வரை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து நேற்று மாலை 5.10 மணிக்கு அது தொடர்பான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் அரச தரப்பினரும், எதிர்க்கட்சியில் இருந்து அரசை ஆதரிக்கும் முஸ்லிம் எம்.பிக்கள் சிலரும் அடங்கலாக 153 பேர் அதனை ஆதரித்து வாக்களித்தமையுடன், ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 60 பேர் எதிர்த்து வாக்களித்தனர்.

இதன்படி வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது.

மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் இன்று முதல் டிசம்பர் 10ஆம் திகதி வரையில் நடத்தப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து டிசம்பர் 10ஆம் திகதி மாலை வரவு – செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

---

## கடலில் குதித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரை அவர் வீடு திரும்பவில்லை.

5 முதல் 10 நிமிடங்கள் நீந்தினால் கரையை அடையக் கூடிய தூரத்திலே படகு இருந்தபோதுதான் அவர் கடலில் குதித்துள்ளார். இந்த நிலையில் இதுவரை அவர் கரை திரும்பாத காரணத்தினால் மீனவரின் கிராமத்தில் பதற்றம் நிலவுகின்றது.

இதேநேரம் இச் சம்பவத்தை மேலும் இரு மீனவர்கள் தெளிவாகக் கண்டும் உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

---

## ‘காலைக்கதிர்’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் நேற்று விடி காலையில் நல்லூர் கைலாசப்பிள்ளையார் கோவிலுக்கருகே உள்ள தமது இல்லத்தில் அமைதியாக நம்மை விட்டுப் பிரிந்தார்.

1942 இல் வட்டுக்கோட்டையில் பிறந்த அவர் தொழில்நுட்பக் கல்லூரியில் படிப்பை முடித்துக் கொண்டு 1960 களின் முற்பகுதியில் ஈழநாட்டில் பயிற்சி உதவி ஆசிரியராக இணைந்தார். 1960 களின் பிற்பகுதியில் கொழும்பில் ‘தினபதி’ ‘சிந்தாமணி’ பத்திரிகைகளில் உதவி ஆசிரியராக இணைந்த அவர் பின்னர் அப்பத்திரிகையின் செய்தி ஆசிரியரானார்.

1983 ஆடிக் கலவரத்தை அடுத்து தமது கொழும்பு வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு யாழ் திரும்பிய அவர் சொற்ப காலம் வீரகேசரி பத்திரிகையில் யாழ் அலுவலகத்தின் ஆசிரிய பீடப் பொறுப்பாளராகக் கடமையாற்றினார்.

1985 இல் ‘உதயன்’, ‘சஞ்சீவி’ பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியராகவும், பிரதம ஆசிரியராகவும் பணியாற்றிய அவர் யுத்த காலத்தில் இலக்கு வைத்து நடாத்தப்பட்ட விபத்தில் படுகாயமடைந்தார். அதனால் சிகிச்சைக்காகவும், பாதுகாப்புக்காகவும் சுமார் மூன்று ஆண்டுகள் சுவிஸில் தங்கியிருக்க வேண்டியவரானார்.

கொடூர யுத்தத்துக்கு மத்தியிலும் நாடு திரும்பிய அவர் தொடர்ந்து ‘உதயன்’, ‘சஞ்சீவி’ பத்திரிகைகளை வழி நடத்தினார்.

2016 இறுதியில் ‘காலைக்கதிர்’ நாளிதழ் ஆரம்பிக்கப்பட்ட சமயம் அதன் ஸ்தாபக மற்றும் பிரதம ஆசிரியர் பதவிகளைப் பொறுப்பேற்றார்.

மூப்பு மற்றும் தளர்வு காரணமாக சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பணியிலிருந்து அவர் ஓய்வு பெற்றிருந்தார்.

தமிழ் இயக்கத் தலைவர்கள், தளபதிகள், கட்சித் தலைவர்கள் மத்தியில் பக்கம் சாரா நடுநிலை பத்திரிகையாளர் என்று பெரிதும் மதிக்கப்பட்டவர் அவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை காலை பத்து மணிக்கு யாழ்ப்பாணம் நல்லூர் கையிலாசபிள்ளையார் கோவிலடியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

## கொரோனாச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்களும், 10 பெண்களும் அடங்குகின்றனர்.

இவர்களில் 23 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோர். 7 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டோர். அதேவேளை, ஒருவர் 30 வயதுக்குட்பட்டவர்

---

## ரிஷாத்தின் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாக்கப்பெடுப்பிலும் கட்சியின் உறுப்பினர்களான கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன், இஷ்ஹாக் ரஹ்மான், அலி சப்றி றஹீம் மற்றும் முாரப் முதுநபீன் ஆகிய நால்வரும் எதிராக வாக்களிக்க வேண்டும் என நேற்றுமுன்தினம் நடைபெற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அரசியல் அதிகார சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

குறித்த தீர்மானம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வருக்கும் மின்னஞ்சல், குறுஞ்செய்தி, வட்ஸ்அப், கடிதம் மூலமாகவும் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தவிர்ந்த ஏனைய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக நேற்று வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் ஒத்திவைக்கப்பட்ட கட்சியின் அரசியல் அதிகார சபைக் கூட்டம் நேற்று மாலை கூடியபோது ஆராயப்பட்டது.

இதன்போது, கட்சியின் யாப்பில் அரசியல் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையில், கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர்களான இஷ்ஹாக் ரஹ்மான், அலி சப்ரி ரஹீம், முாரப் முதுநபீன் ஆகியோரை கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்துவது எனவும், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

---

## நேற்று 735...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 57 ஆயிரத்து 361 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 376 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 27 ஆயிரத்து 110 ஆக உயர்வடைந்துள்ளது.

---

## பனையால் தவறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் மாலை சீவல் தொழிலில் அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது தவறி விழுந்துள்ளார்.

இதையடுத்து அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பகல் வைத்தியசாலைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்ட பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் நுரையீரலில் வெடிப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## மைக்கல் விளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாலுசந்தி மைக்கல் விளை யாட்டுக்கழகத்தின் இளம் வீரரான கண்ணன் காந்தன் (வயது 22) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## விரைவில் பஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பஸிலின் இந்திய விஜயத்திற்கான ஒழுங்குகளைக் கவனிக்குமாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பணிக்கப்பட்டிருக்கின்றார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் விசேட செய்தியுடன் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விரைவில் புதுடில்லி செல்வார் எனத் தெரிகின்றது.

எனினும், பஸிலின் புதுடில்லி விஜயத்துக்கு மோடி அரசு பச்சைக் கொடி காட்டிவிட்டதா என்பது இன்னும் உறுதியாகவில்லை. (உ)

---

## அமைச்சர் காமினி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டத் தொடரிலும் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

---

## யாழ்.அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதேச செயலாளர் சா.சுதர்சன் வவுனியா பிரதேச செயலகத்திற்கும் –

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) முரளிதரன் முல்லை மாவட்டச் செயலகத்திற்கும் –

நல்லூர் பிரதேச செயலா ளர் எழிலரசி கிழக்கு மாகாண சபைக்கும் –

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சிவசிறி யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்கும் –

தற்போதைய வவுனியா பிரதேச செயலாளர் கமலதாசன் தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கும் – இணைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரபாகரமூர்த்தி கோப்பாய் பிரதேச செயலகத்திற்கும் –

கோப்பாய் பிரதேச செயலாளராகப் பணியாற்றும் சுபாஜினி மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கும் –

சங்கானை உதவிப் பிரதேச செயலாளர் கிருஷ்ணவதனா யாழ். மாவட்டச் செயலகத்திற்கும் – இடமாற்றப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்றம் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## பொலித்தீன் பிரேத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குடாநாட்டில் கொரோனா உச்சம் பெற்ற கடந்த மே மாதம் பிரேதங்களை எடுத் துச் செல்வதற்காக பொலித்தீன் உறைகள் 200 வைத்தியசாலை நிர்வாகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட பொலித்தீன் உறைகள் ஒவ்வொன்றும் தலா 3,500 ரூபா வீதம் சிட்டையிடப்பட்டுள்ளன.

இதேநேரம் இக் காலப் பகுதியில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினாலும் 100 பொலித் தீன் உறைகள் கொள்வனவு செய்யப்பட்டதான தகவல் ஓர் உரையாடலின்போது கண்டறியப்பட்டதனால் இரு பொலித்தீன் உறைகளின் தரமும் பரிசோதித்தபோது நிறத்தில் மட்டுமே வேறுபாடு காணப்பட்டபோதும் தரத்தில் எந்தவொரு வேறுபாடும் காணப்படவில்லை. இதனால் மாகாண சுகாதார அமைச்சு கொள்வனவு செய்த பொலித்தீன் உறையின் விலையை ஆராய்ந்தபோது அவை வெறும் 800 ரூபாவிற்கே கொள்வனவு செய்யப்பட்டன என்ற அதிர்ச்சித் தகவல் வெளியானது.

இதன் காரணமாக போதனா வைத்தியசாலையின் கொள்வனவு உத்தியோகத்தர் தொடர்பில் முறையிடப்பட்டதோடு 200 பொலீத்தீன் உறையை வழங்கியவரின் ஒப்பந்தம் 200 உறைகளுடன் நிறுத்தப்பட்டு வேறு நிறுவனத்தின் மூலம் தரம் கூடிய பொலித்தீன் உறைகளை கொளவனவு செய்யப்பட்டன என்று கூறப்படுகின்றது. இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட தரம் கூடிய உறைகள் கூட தலா 1,550 ரூபாவிற்கே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் ஒரு தரப்பு எழுத்தில் முறையிட்டுள்ளது. இருந்தபோதும் கொள்வனவு செய்தவர் தொடர்ந்தும் அதே பணியில் இருக்கும் நிலைமையில் உள்ளக விசாரணை ஒன்று இன்று இடம்பெறுகின்றது.

இந்த விடயத்தில் மத்திய சுகாதார அமைச்சு அல்லது மத்திய கணக்காய்வு திணைக்களம் தலையிட வேண்டும் எனக் கோரிக்கை முன் வைக்கப்படுகின்றது.

# மண் கொள்ளையை தடுப்போம் வெருகலில் மக்கள் போராட்டம்



இயற்கை வளங்களைக் காப்போம் எனும் கோரிக்கையை முன்வைத்து திருகோணமலை வெருகல் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நடத்தப்படும் மண் கொள்ளையைக் கண்டித்து கண்டணப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வெருகல் பிரதேச செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்தில் வெருகல் பிரதேச வாசிகள் பங்கேற்றிருந்தனர்.

மணல் அகழ்விற்கான அனுமதிகள் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற போதிலும் குறித்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படக்கூடிய அளவை விடவும் கூடுதலான மண் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமையால் அப்பகுதியில் பாரியளவில் பாரிய அளவில் மணல் அகழப்படுவதாக அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர்.

அதிகபடியான மணல் அனுமதிப்பத்திரங்கள் வெளிமாவட்டத்தினருக்கு வழங்கப்படுவதால் குறித்த செயற்பாட்டின் காரணமாக அப்பகுதி வாசிகளது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் குறிப்பாக அப்பகுதியின் மண் வளம் அழவிற்கதிகளவில் களவாடப்படுவதால் மேற்படி பகுதி நீரினுள் மூழ்கக்கூடிய நிலைக்கு தள்ளப்பட இருப்பதாகத் தெரிவித்தனர்.

நாதன் ஓடை எனும் பகுதியில் அதிகளவில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தின் காரணமாக அங்கு ஓர் அணை ஒனறைக் கட்டுவதற்காக தாம் பலமுறை அரசிடம் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அதனை அரசு அமைத்துத் தராதபட்சத்தில் தனிநபர் ஒருவர் அதனைக் கட்டுவதற்கு முன்வந்த நிலையில் குறித்த கட்டுமானப்பணிகள் நிறைவடையும் தறுவாயில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது தன்னிச்சையான அதிகாரங்களைப் பயன்படுத்தி குறித்த கட்டுமாணப் பணிகளை நிறுத்தியிருக்கிறார் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மஹஜர் ஒன்றையும் பிரதேச செயலகத்தில் கையளித்தனர்.



## மண்சரிவு அனர்த்த அபாயம் 5 பாதைகள் அடையாளம்

மண்சரிவு அனர்த்தத்துடன் கூடிய 5 பாதைகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு - கண்டி பாதையில் கடுகன்னாவை, மாவனல்லை – கேகாலைக்கு இடையிலும் கண்டி - நுவரெலியா வீதியிலும், கம்பளை – நாவலப்பிட்டி வீதியிலும் எல்ல – வெள்ளவாய உள்ளிட்ட பகுதியிலும் இந்த அனர்த்த நிலை காணப்படுவதாகப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் மண்சரிவு அபாயம் உள்ள நெடுஞ்சாலைகள் மற்றும் வீதிகளை முறையான ஆய்வுகள் மற்றும் கண்காணிப்புகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அண்மையில் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அருட்தந்தை சிறில் காமினி மீண்டும் சி.ஐ.டியில் முன்னிலை



அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ, குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் மூன்றாவது நாளாக நேற்றும் (திங்கட்கிழமை) முன்னிலையாகியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அருட்தந்தை சிறில் காமினிக்குத் தெரிந்த விடயங்களை வாக்குமூலமாகப் பெற்றுக்கொள்வதற்கே இதற்கு முன்னரும் 2 தடவைகள் குற்றப் புலனாய்வு திணைக்களம் அவரை அழைத்திருந்தது.

இந்நிலையில் இன்றும் சிறில் காமினி பெர்ணான்டோ, குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் அளித்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கஜ முத்துக்களை விற்பனை செய்ய முயன்ற மூவர் கைது!

சட்டவிரோதமான முறையில் 10 கஜ முத்துக்களை விற்பனை செய்ய முயன்ற மூவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை வரிப்பத்தான்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த மைதான பகுதியில் இந்தச் சட்டவிரோத செயற்பாடு இடம்பெறவுள்ளதாகக் கல்முனை பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு ஞாயிற்றுக்கிழமை மாலை கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட கஜ முத்துக்களை ஒரு கோடி ரூபாவிற்கு விற்பனை செய்ய சந்தேகநபர்கள் முயன்றுள்ளனர் என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்தச் சோதனை நடவடிக்கை விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப் புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஆர் சேனாதீரவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட கட்டளை அதிகாரி டி.சி வேவிட விதான வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படையின் தலைமையதிகாரி மெரில்



டயஸ் தலைமையிலான அதிரடிப்படையினர் இந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டு 45 ,50 வயது மதிக்கத்தக்க மல்வத்தை பகுதியை சேர்ந்த இரு சந்தேக நபர்கள் உட்பட வரிப்பத்தான்சேனையை சேர்ந்த மற்றுமொரு சந்தேக நபரையும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சந்தேக நபர்கள் மூவர் மற்றும் சான்று பொருளகள் யாவும் இறக்காமம் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதுடன் நீதிமன்ற நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## 855 குற்றச்சாட்டடங்கிய குற்றப்பத்திரிகை பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராக வாசிப்பு!



முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் குற்றப்பத்திரிக்கை கொழும்பு மேல் நீதிமன்றில் வாசிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தாக்குதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்து பூஜித் ஜயசுந்தரவிற்கு எதிராக தாக்கல் செய்யபப்பட்டுள்ள வழக்கு நீதிபதிகள் நாமல் பலல்லே, ஆதித்ய படபெந்திகே மற்றும் மொஹமட் இர்தீன் ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டமா அதிபரால் தாக்கல்செய்யப்பட்ட 855 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரிகை குற்றம் சாட்டப்பட்டவர் முன்னிலையில் வாசிக்கப்பட்டது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாகப் போதுமான புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதும் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவே குற்றப்பத்திரிக்கை வாசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புலம்பெயர் உரித்து

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் பங்குபற்றிய கனடாக் கூட்டத்தில் நெறிமுறையற்ற விதத்தில், ஒருமையில் அழைக்கும் வாசகங்களை அப்பட்டமாகக் கூறி, அட்டகாசம் பண்ணிய குழுவினரின் திருவிளையாடல், பல தரப்புகளினால் சில விடயங்களைத் தவறாக அர்த்தம் பண்ண வழி செய்து விட்டதோ என்ற எண்ணத்தைத் தந்து நிற்கின்றது.

அதனால் பதிவுகளையும் விடயங்களையும் நேர்சீராக்கும் ஒரு கட்டாயம் எழுந்துள்ளது.

கனடாவில் முறையற்ற ஒரு கும்பலின் கீழ்த்தரமான நடத்தை காரணமாக ஒட்டுமொத்த புலம் பெயர் தமிழர்களின் உரிமை, கடப்பாடு,பொறுப்பு, ஈடுபாடு, பங்களிப்பு ஆகியன தொடர்பில் ஒரு முரணிலையான நிலைப்பாடு பல தரப்புகளினாலும் பிரதிபலிக்கப்பட்டு வருகின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

தமிழர் தாயகத்தல் தமிழ் மக்களின் தீர்மானம் தொடர்பில் புலம்பெயர்ந்தோர் என்ன கேட்பது, எப்படித் தலையிடுவது, எப்படி எங்கள் விடயத்தில் அவர்கள் செல்வாக்குச் செலுத்த முடியும் என்றெல்லாம் கூட இங்கு கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அப்படி கேள்விகள் எழுப்பப்படுகின்றமை ஆச்சரியத்தை மட்டுமல்ல விசனத்தையும் தந்து நிற்கின்றது.

இதையொட்டி புலத்திலும், புலம்பெயர்ந்தும் வசிக்கின்ற நமது உறவுகள் மூன்று விடயங்களைக் கவனிக்க வேண்டும்.

ஒன்று – புலம்பெயர் தமிழர்கள் என்பவர்கள் இங்கு தாயகத்தில் வசிக்கும் எமது மக்களின் பிரிக்க முடியாத அங்கம். எங்கள் இனத்தின் மீது பௌத்த, சிங்களம் கட்டவிழ்த்த பேரினவாதக் கொடூரத்தின் கட்டாயத்தால் தம் தாயக மண்ணில் இருந்து வேரோடும், வேரடி மண்ணோடும் பூமிப் பந்தெங்ஙனும் தூக்கி வீசப்பட்ட எங்கள் இரத்தத்தின் இரத்தங்கள். தங்கள் வாழ்வும் சிந்தனையும் தாயகமாக எண்ணி, அந்த நினைப்பிலேயே வாழ்க்கையைக் கடத்துபவர்கள். அது மட்டுமல்ல, தமிழர்களின் உரிமைப் போராட்டத்திலே கணிசமான – இல்லை அதையும் தாண்டி பெரும் – பங்காற்றியவர்கள். அதனால் எழுந்த கடனை – கடப்பாடுகளை – நிறைவு செய்வதற்காக இன்றும் குளிரிலும், பனியிலும், இரவிலும், பகலிலும் வலியோடு பணி சுமப்பவர்கள். நமது தாயகத் தமிழர்களின் எண்ணிக்கையில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினரான அவர்கள் ஈழத் தமிழர் என்ற கட்டமைப்பில் பிரிக்கவே முடியாதவர்கள்.

இரண்டாவது – சிறுபான்மையினரான தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் எந்தத் தீர்விலும் தாயகம் திரும்புவதற்கான அவர்களின் உரிமை (Right to return) முதன்மையாக உள்ளடக்கப்பட வேண்டிய விடயம். ஆகவே தீர்வு பற்றிய தீர்மானத்தில் அவர்களும் மிக முக்கிய பங்காளர்கள்.

மூன்றாவது – தலைவர் பிரபாகரனின் கடைசி மாவீரர் தின உரையை – 2008 பேச்சை – நுணுக்கமாக ஆராய்பவர்கள் அதனூடே இழையோடும் ஒரு முக்கிய அம்சத்தை அடையாளம் காணமுடியும். அது, தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் கணிசமான பங்கை – பொறுப்பை – புலம்பெயர் சமூகத்திடம் – அதுவும் குறிப்பாக புலம் பெயர் இளம் சமூகத்திடம் – அவர் அந்த உரை ஊடாக ஒப்படைத்திருக்கின்றமையாகும்.

ஆகவே, சுமந்திரனிடம் எல்லாவித கேள்விகளையும் எழுப்பும் சகல உரிமையும் புலம்பெயர் சமூகத்திற்கு உண்டு. அதை சுமந்திரனும் சம்பந்தனும் கூட அங்கீகரித்துத்தானாக வேண்டும். அவர்கள் அதனை ஏற்று அங்கீகரித்துமுள்ளனர்.

ஆனால், அன்று அந்தக் கூட்டத்தில் அக்கும்பல் கேள்வி கேட்ட முறைமையும், நடந்து கொண்ட விதமும்தான் தப்பே தவிர, அதற்காக ஈழத்தமிழர் விடயத்தில் புலம்பெயர் தமிழர்களின் அரசியல் உரித்தை நாம் கேள்விக்குட்படுத்த முடியாது என்பதுதான் நியாயமாகும். அன்றைய சம்பவத்தை விமர்சிக்கும் யாரும் இதனை மறந்து விடக்கூடாது.

## கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள வடிகான் பகுதியை அபகரிக்க முயற்சி

மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் உள்ள வடிச்சல் பகுதியை அபகரிக்க முன்னெடுக்கப்பட்ட முயற்சி மாநகர முதல்வரால் நேற்று (திங்கட்கிழமை) முறிடிடிக்கப்பட்டுள்ளதுடன் அபகரிப்புக்கு கொண்டுவரப்பட்ட பொருள்களும் மாநகரசபையால் கையகப் படுத்தப்பட்டன.

மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள வடிச்சல் பகுதியை தொடர்ச்சியாக அபகரிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் நிலையில் அவற்றைத் தடுத்து நிறுத்துதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளத்தை வாவியில் கொண்டுசேர்க்கும் பகுதியாக குறித்த வடிச்சல் பகுதி காணப்படுகின்றது.

நீண்டகாலமாக இந்தப் பகுதியை சிலர் அபகரிக்கும் நோக்குடன் வேலி அடைக்க முற்படும் நிலையில் அவற்றைத் தடுக்கும் செயற்பாடுகளை பிரதேச மக்களும் மாநகர சபையும் பிரதேச செயலகமும் இணைந்து முன்னெடுத்துவருகின்றன.

இன்று சிலர் வடிச்சல் பகுதியை வேலியிட்டு அடைக்கமுற்பட்டபோது அங்கு சென்ற மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் மேற்படி நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தியதுடன் அது தொடர்பில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவனின் கவனத்துக்குக் கொண்டுசென்றதை தொடர்ந்து அப்பகுதிக்குச் சென்ற பிரதேச செயலாளர் மேற்படி நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தினார்.

மேற்படி பகுதி அரசாங்கத்துக்கு சொந்தமானது எனவும் அந்தப் பகுதியில் எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கவேண்டாம் எனவும் இதன்போது பிரதேச செயலாளர் வேலியடைப்பில் ஈடுபட்டவர்களுக்கு உத்தரவிட்டார்.

அப்பகுதி அரச காணியாகவும் வடிச்சல் பகுதியாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் சிலர் போலியான ஆவணங்களைக் கொண்டுவந்து பொலிஸாரின் ஆதரவுடன் அந்தப் பகுதியை அபகரிக்க முனைகின்றனர் என மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

ஐந்தாவது தடவையாக இவ்வாறான போலி ஆவணங்களைக்கொண்டுவந்து இந்த செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். இதற்கு முன்னர் காணி அடைக்கும்போது அதனைத் தடுத்த பொதுமக்கள் நான்கு பேருக்கு எதிராக மேற்படி நபர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் அவர்களுக்கு இந்த காணிக்குள் செல்லக்கூடாது எனத் தடைவிதித்துள்ளனர். காணி விடயங்களில் தலையிடுவதற்கு பொலிஸாருக்கு அதிகாரமில்லை. அரசகாணியை அபகரிப்பவர்கள் ஆதாரம் இருந்தால் நீதிமன்றம் சென்றுவரவேண்டும்.

அவ்வாறில்லாமல் இவ்வாறு சட்டவிரோத காணி அபகரிப்பை முன்னெடுப்பவர்கள் பொலிஸாரின் துணையுடன் வருகின்றமை இலங்கையின் சட்டத்தை மதிக்கும் செயற்பாடு அல்ல.

அரசகாணிகளை பாதுகாக்க வேண்டிய பொலிஸ், சட்ட விரோத உபகரணங்களைக் கொண்டு காணிகளை அபகரிப்பவர்களுக்குப் பக்கபலமாக இருக்கின்றமை கவலைக்குரியது. இது தொடர்பில் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பொதுமக்களுக்கு தடைவிதித்த பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கையெடுக்கவேண்டும்.

எதிர்வரும் காலத்தில் குறித்த பகுதியில் மாநகரசபையால் விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுத்து பாதுகாக்கவுள்ளளோம் எனவும் மாநகர முதல்வர் தெரிவித்தார்.

## கண், காது புலன்கள் செயற்படும் ஒருவரை சபாநாயகர் ஆசனத்தில் அமர்த்த வேண்டும்

### லக்ஷமன் கிரியெல்ல தெரிவிப்பு

அஜித் ராஜபக்ஷ எம்.பி சபாநாயகர் ஆசனத் தில் இருந்து சபைக்கு தலைமை தாங்க தகுதியில்லாதவர் என்று எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்த கருத்தை வெளியிட்டார். எதிர்க்கட்சியின் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினிகுமாரி விஜேரத்னவின் மீது ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி கடந்த 20ஆம் திகதியன்று கூறியனார் என கூறப்படும் 'தகாத சொல்' தொடர்பிலேயே இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ரோஹினிகுமாரி, சபாநாயகரிடம் தமது நாடாளுமன்ற சிறப்புரிமை தொடர்பில் நேற்று (திங்கட்கிழமை) முறையிட்டார்.

திஸ்ஸகுட்டியராச்சி பயன்படுத்திய 'சொல்லை' தாம் கூறினால் அது திஸ்ஸ குட்டியாராச்சியின் 'தாயை' அவமதிப்பது போன்று அமைந்து விடும் என்று ரோஹினிகுமாரி இதன்போது குறிப்பிட்டார்.

எனவே இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று ரோஹினிகுமாரி கேட்டுக்கொண்டார்.

இதேவேளை இந்த 'சொல்லை' திஸ்ஸக் குட்டியாராச்சி கூறியபோது, அது தொடர்பில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, சபைக்கு தலைமை தாங்கிய அஜித் ராஜபக்ஷவிடம் முறையிட்டபோதும் அவர், குறித்த சொல் தமக்கு தெளிவாகக் கேட்கவில்லை என்று குறிப்பிட்டார் ரோஹினி குமாரி குற்றம் சுமத்தினார்.

இதன்போதே சபாநாயகர் ஆசனத்தில் அமர்த்தும் தலைமை தாங்கும் சபைக்கு தலைமை தாங்கும் உறுப்பினர் ஒருவரை நியமிக்கும்போது, விழிப்புலன் மற்றும் செவிப்புலன் தெளிவாக உள்ளவரை நியமிக்க வேண்டும் என்று லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்.

வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021



"புல்லின் இதழை மாந்தன் உருவாக்கும் வரை இயற்கை அவனது அறிவியல் அறிவைக் கண்டு சிரிக்கவே செய்யும்"
தோமஸ் அல்வா எடிசன்
(அமெரிக்க அறிவியலாளர் )

காலைக்கதிர் Kalaikkathir



# வவுனியாவில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்புக் கடமையில் பொலிஸார்

தமிழ் மக்களின் விடுதலைக் காகப்போராடிஉயிர்நீத்தவர்களை நினைவுகூரும் மாவீரர் வாரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம் பமாகியது. இந்நிலையில் வவுனி யாவின்குறிப்பிட்டசிலபகுதிகளில் பொலிஸார் விசேட பாதுகாப்புக் கடமையில்ஈடுபட்டுவருகின்றனர்.

குறிப்பாக கடந்த வருடங்க ளில் மாவீரர் தினம் அனுஷ்டிக் கப்பட்ட வவுனியா நகரசபை வாயி லில் அமைந்துள்ள பொங்கு தமிழ் தூபி, வவுனியா குளத்தடி மற்றும் நகரின் முக்கிய சந்தி களில் பொலிஸார் விசேட கடமை களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொலிஸாரின் விண்ணப்பத்துக் கமைய மாவீரர் தினத்தை அனுஷ் டிப்பதற்கு, வவுனியா நீதிமன் றம் 8 பேருக்கு தடை உத்தரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக் கது.

# மேலும் ஒருதொகுதி பைசர் இலங்கைக்கு வரவுள்ளது!

இலங்கைக்கு மேலுமொரு தொகை தடுப்பூசிகள் கொண்டு வரப்படவுள்ளன என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

குறித்த தடுப்பூசிகள் நேற்று மற்றும் இன்று நாட்டுக்குக் கொண்டுவரப்படும் என அவர் தெரிவித்தார்.

அத்கமைய 19 லட்சம் பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உலக சந்தையில் தங்கம் வீழ்ச்சி!

உலக சந்தையில் தங்கத்தின் விலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக செய்தி வெளி யாகியுள்ளது.

அதற்கமைய உலக சந்தையில் தங்கத்தின் விலை ஓரளவு வீழ்ச்சியடைந்துள்ளது. அது ஓர் அவுன்ஸ் தங்கத்தின் விலை 1846 அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

கடந்த வாரம் ஓர் அவுன்ஸ் தங்கம் 1861.10 அமெரிக்க டொலராக பதிவாகியி ருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் வெளி யான அறிக்கைக்கமைய, தங்கத்தின் விலை யில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப் படுகின்றது.

# அனைத்து மாவட்டங்களிலும் ஆயுதம் தாங்கிய படையினர்

## வர்த்தமானி வெளியீடு

நாட்டின் அனைத்து ஆயுதம் தாங்கிய முப்படையினருக்கும் அழைப்பு விடுக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதி பதிகோட்டாபயராஜபக்ஷவெளியிட்டுள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) முதல் அமுலா கும் வகையில் இந்த அதிவிசேட வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் அனைத்து நிர்வாக மாவட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்பு டைய கடற்பரப்புகளில் பாதுகாப்பைப் பேணுவதற்காக இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 தாக்குத லைத் தொடர்ந்து, அப்போதைய ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன, ஆயுதம் தாங் கிய படையினரை அமைதியைப் பேண அழைப்பு விடுத்து விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தார்.

ஒரு மாத காலத்துக்கு அமுலாகும் வகையில் ஒவ்வொரு மாதமும் 22 ஆம் திகதி இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தீக்காயங்களுக்கு உள்ளாகி மனைவி சாவு; கணவன் கைது

தீக்காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட குடும்ப பெண், கடந்த சனிக் கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார்.

இந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் கண வரை பருத்தித்துறை பொலிஸார் ஞாயிற் றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை – திக்கம் அல்வாய் பகுதி யில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பரம நாதன் சசிகலா (வயது 47) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி மதுபோதையில் வீட்டுக்கு வந்த கணவன், மனைவியுடன் தகராறு புரிந்துள்ளார். இதன்போது மனைவி, தன் மீது மண்ணெண்ணெயை ஊற்றி தான் தற்கொலை செய்யப்போவ தாக மிரட்டிய வேளையில், கணவன் தன்னிடமிருந்த லைட்டர் மூலம் மனை விக்கு தீ வைத்தார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் கண்டறி யப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே சம்ப வம் தொடர்பில் கணவரைக் கைது செய் துள்ள பொலிஸார், மேலதிக விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.



# ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்குழு நிந்தவூர் விஜயம்!

ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட் டக் குழு வினர் ஞாயிற்றுக்கிழமை அம் பாறைமாவட்டத்துக்கு விஜயம்செய்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தலைமையில் முன்னாள் பெற்றோலிய வளத்துறை பிரதி அமைச்சர் அனோமா கமகே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சன்பித் சமரசிங்க, ரத்னபிரிய அடங்கலான குழுவினர் இதன் போது கட் சியின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடி னர்.

இது தொடர்பாகக் கலந்துரையாடல் ஐக்கிய தேசியக் கட்சியின் நிந்தவூர் பிரதேச காரியாலயத்தில் பிரதேச அமைப் பாளர் எம் எம் எம் ரிபா தலைமையில் இடம்பெற்றது.

# எமது தேசம் எமது மரங்கள் என்ற தொனிப்பொருளில் ஒரு லட்சம் பனைவிதை நாட்டும் செயற்திட்டம் ஆரம்பம்







'எமது தேசம் எமது மரங்கள்' என்ற தொனிப்பொருளில் தமிழர் தாயகமாம் வடக்கு கிழக்கில் ஒரு லட்சம் பனைவிதைகள் நடுகை செய்யும் செயற்திட்டம் இன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சுற்றுச்சூழல் பிரிவினரால் வேலணை அம்பிகை நகரில் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் இந்தத் தேச விடுதலைக்காகத் தனது 04 பிள்ளைகளை அர்ப்பணித்த சண்முகலிங்கம் முதலாவது விதையை நாட்டிவைத்து இந்தச் செயற்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் -200

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**508. அப்படியெனில் கோட்டாபய தரவிழையும் புதிய அரசமைப்புச் சட்டத்தினால், அதன் ஆக்கங்களில் பங்குபற்றுவதால், தமிழ் மக்களுக்கு, பிரயோசனம் ஏதும் உண்டா?**

அவற்றில் பங்குபற்றி வழமையாக வைக்கப்படும் கோரிக்கைகளை வைக்கலாம். ஆனால் இதுவரை வலுவாக்கப்பட்டு, வேரூன்றி வளர்ந்து விட்ட ஒற்றையாட்சியின் ஒரு நாடு என்ற சட்டவிதிகள், அதனுள்ளே பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுத்து அதன் சாசனங்களைப் பாதுகாத்து வளர்க்கும் பொறுப்பு அரசுக்கு கடமையாக்கப்பட்டுள்ளது. இப்படியாக கூறு கூறுகளாக இணைக்கப்பட்டு, சுற்றுச் சூழலில் அதற்கு மண்பரப்புக்களால் அத்திவாரம் வைத்தவற்றை, இப்பொழுது போர்முடிந்த பின் முற்றுமுழுதாக சிங்கள மக்களின் பௌத்த சாசனத்தின் அசைக்க முடியாத மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கும்கூடிய அதிகாரத்தால் ஆக்கப்பட்ட அசைக்க முடியாத கருங்கல் கட்டடமாக இந்தப் புதிய அரசமைப்புச் சட்டத்தை தரவே அவர் விழைகிறார். அது அவரின் தேர்தல் கால முரசறையாகவும் இருந்தது. தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வந்த கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை போரின் பிறகு, வீரியத்துடன் செயற்படுத்தும் அந்தப் போக்குகளை



மேலும் வலுப்படுத்தவே ஒரு நாடாக – ஒற்றையாட்சியாக – அது கொண்டு வரப்பட முயற்சிக்கப்படும்.

இதுவரையிலும் இருந்த ஏதோ சில அதிகாரங்கள் இனிமேல் சிங்கள, பௌத்தர்களுக்கு எதிராக தமிழ் மக்களாலோ மற்ற இனத்தவர்களாலோ பிரயோகிக்கப்பட முடியாத அதிகாரம் மற்றவையாகவும் இயற்றப்படலாம்.

முப்படைகளும், பொலிஸும் முற்று முழுக்க சிங்கள பௌத்தமயமாக்கப்பட்டு, முன்னர் பயங்கரவாதத்துக்கு எதிராக அவர்கள் இயங்குகிறார்கள் எனக் கூறப்பட்டது. தற்சமயம் தேசியப் பாதுகாப்புக்காக (National Security) எனப் போரின் முடிவிலும் வட கிழக்கின் மீது, இராணுவ மயமாக்கி விரித்து விடப்பட்டுள்ளது. அவர்களது தேசியம் ஒன்றுதான். அது சிங்கள, பௌத்தம் என்பதுதான். அதற்கு இடையூறு தரக்கூடியதாக இன விகிதாசாரத்திலாவது ஆள்சேர்ப்பு செய்ய புதிய உத்திகள் உள்ளடக்கப்படுமா என்பது துர்லபமே.

முழுத்தீவும் ஒரு நாடு என்ற முக்கியமான சட்ட விதியில் இருந்தே அது முழுவதும் ஒரு நில ஒற்றுமைப்பாடு, அதில் பிரிவில்லை என்ற தத்துவத்திலேதான், வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பரம்பரை பிரதேசம் – அவர்களது பிரதேசம் – என்பது மறுக்கப்பட்டு, அங்கு இராணுவ ஆக்கிரமிப்பு நீடிக்கிறது.

தொடர்ந்து வரக்கூடிய இவற்றைக் கணித்துத்தான் சத்தியாக்கிரகப் போராட்டக் காலங்களிலேயே அன்றைய சிங்கள பௌத்த புத்திஜீவிகளான என்.கியூ.டயஸ், பிலீக்ஸ் டயஸ்பண்டாரநாயக்கா போன்றோர் ஸ்ரீமாவோவின் ஆட்சிக்காலத்திலேயே முப்படைகளையும் மாற்றியமைக்கும் திட்டத்தையும் புகையிரதங்களில் தமிழரை ஏற்றி அனுராதபுரத்துக்கு கொண்டு சென்று முடித்துப் பயமூட்டுவதையும் சிந்தித்தார்கள். இனங்களுக்கு எதிராகப் பாதுகாப்பு படைகளை சிங்களப் பௌத்தவராக்கி அந்தச் சிந்தனையை மேலும் வளர்த்து, போரில் வெற்றிக்கு வழி கோலியவர்கள் ராஜபக்ஷக்கள்.

ஆக ஒரு நாடு ஓர் அரசு, ஓர் அதிகாரம், ஒரு சட்டம், சிங்கள – பௌத்த இராணுவம் ஒரு நாட்டினர் என்ற தேசச்சிந்தனை என்பவை வளர்ந்து, மரமாகி, நிற்கும் பௌத்த மேலாண்மையின் மகாவம்ச மனோ நோக்கிலேயே ஜனாதிபதி சில தார்மீக எதிர்ப்புக்கிடையிலும் 'சாந்தஹிரு சேயா' தூபி நிர்மாணிப்பு வேலைகளில் ஈடுபடுகிறார். வன்முறையின் வெற்றிக் களிப்புக்கு பௌத்த தர்மம் ஆதரவு தருவதில்லை. பண்டைய இத்தாலிய, கிரேக்க சர்வாதிக்க காலங்களில் மற்ற நாடுகளின் இனங்களின் மேல் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகளின் நினைவாக இப்படி வளைவுகள், தூபிகள் அமைக்கப்படுவது வழமை. அவை ஒரு செய்தியை சொல்லாமல் சொல்லி நினைவூட்டும். அது அந்த நாட்டு மக்கள், இனங்கள் அவர்களுக்கு அடிமைகளாக்கப்பட்டுள்ளனர் என்பதையே பறைசாற்றும். அரசியல் யாப்பு அல்லது அரசமைப்புச் சட்டங்கள் தொடர்பான ஆரம்பப் புள்ளிகளே இந்த மனோபாவத்திலும் கள யதார்த்தங்களிலும்தான் இருக்கின்றன. அதனை அணுகக்கூடிய நிஜமான ஆயுதபலத்துடன் கூடிய அறிவாற்றலும், யதார்த்தமும், சாதுரியமும் கொண்ட அரசியல் தமிழ் மக்களிடையே உண்டா, உருவாக்க வேண்டுமா?



**509. இப்படியான மனோபாவங்களில் நல்லிணக்கம் என்பது ஏற்பட வாய்புண்டா?**

உன்னுடைய எதிரிகள் எல்லோரையும் உன்னால் கொன்று விட முடியாதென்பதால் அவர்களை ஒருமைப்படுத்திக் கொள் (Assimilate) என பழைய புத்திமொழி ஒன்று உண்டு. எம்.ஜி.ஆருக்கு கூட கவிஞர் கண்ணதாசனைப் பற்றி அவரை ஒருமைப்படுத்திக் கொள் என அறிவுரை கொடுக்கப்பட்டதால் கண்ணதாசன் ஆஸ்தான கவிஞனானார் என்ற கருத்து உண்டு. ஒரு நாடு, ஒற்றையாட்சி, பௌத்தத்துக்கு முன்னுரிமை என்பவற்றை மற்றைய இன மக்கள் ஏற்றுக் கொண்டு ஒழுகினால் அது நல்லிணக்கத்தின் தோற்றம் என்பது நல்லாட்சிக் காலத்திலேயே தேசிய சகவாழ்வு என்று பரப்புரைக்கப்பட்டது. நல்லிணக்கம் என்பது மஹிந்தாவின் காலங்களிலும் பேசப்பட்டது. அவர் பிரபாகரனையும் நல்லிணக்கத்துக்கு வர வேண்டும் எனவும் நேரடியாகவே பேச விரும்புகிறார் எனவும் தெரிவித்தார். மஹிந்தாவின் ஆதரவு ஊடகங்கள் அவர் ஒரு ஒற்றுமையான நாட்டைப்பற்றி (United Country) பேசவேண்டும், ஒற்றையாட்சியான குடியமைப்பு யாப்பை (Unitary Consistution) பற்றி பேசத் தேவையில்லை என வலியுறுத்தின. அவர் அப்படி பேசியமை நல்லிணக்க தூதுவராக அவரை சர்வதேசத்துக்குக் காட்டியது. ஆனால் சர்வதேசம் மஹிந்த சொன்ன ஒற்றுமையான நாடும் ஒற்றையாட்சிக்கான அரசமைப்புச் சட்டமும் அவரை பொறுத்தளவில் ஒன்றே என்பதை புரிந்து கொள்ளவில்லை.

**510. அப்படியானால் சிங்கள மக்கள் குறிப்பிடும் ஒற்றுமையான நாடு என அவர்கள் கருதுவது என்ன ?**

அது என்றுமே சிங்கள மக்கள், தமிழ் மக்களை அடக்கி அவர்களது அபிலாஷைகளை முடக்கி அவர்களது எதிர்பார்ப்புக்களைக் குறைத்தோ, அழித்தோ வாழ வேண்டுமென்பதா? அல்லது வடக்குக்கும் கிழக்குக்கும் தேவையான சுய நிர்வாகங்களை தந்து அவை நாட்டில் ஓர் அலகாக, இப்படி தேவையற்ற அடக்குமுறைகள் இன்றி இருப்பதா? இவற்றுக்கு இதய சுத்தியோடு பதில்கள் கண்டால் தான் ஆக்கப்படும் எந்த அரசமைப்பிலும் பங்குபற்றல் பிரயோசனமாக இருக்கும்.



அந்த அடிப்படைகள் அற்ற பூசிமெழுகல்கள் நின்று பிடிக்கப்போவதில்லை.

**511. புதிய அரசமைப்புச் சட்ட ஏற்பாடுகளில் ஈடுபடுவது தேவையில்லை என்கிறீர்களா?**

ஈடுபடுவதால் எதை அடையப்போகின்றோம் என்பதில் முதலில் தெளிவு பெற வேண்டும்.

இந்த 70 ஆண்டுகளில் தமிழ் மக்கள் முன்வைத்த கோரிக்கைகள் எவையுமே ஏற்கப்பட்டனவல்ல. அவர்களுக்கு (மேலாண்மை மனோபாவத்தில் உள்ள சிங்கள பௌத்த மக்களுக்கு) தாங்கள் விரும்பிய – தங்களுக்கு வேண்டுமென்ற – தேவையான அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிக் கொள்ள பொதுவான அதிகாரம் உண்டு. அதற்கெதிராக எந்த இணக்கப் பேச்சுவார்த்தைகளாலும் அவர்களோடு அடையப்போவதென்ன? சர்வதேசப் பரப்பில் இருந்து சில அழுத்தங்கள் வரலாம். ஆனால் அவற்றை ஏற்று செயல்படுத்தும் மனோபாவம் இல்லாதவிடத்தில் அவை செல்லுபடியாகா. ஓரளவு விருப்பு இருந்தாலும் அதிகாரத்தையே முக்கியமாக கொண்டு அதை உறுதிப்படுத்த விரும்பும் அரசு சிங்கள பேரினவாத ஆதரவை மீறி சலுகைகள் தர முடியாது. "மக்களின் ஆணை" என்பதும், அது அவர்களது இறைமை சார்ந்தது என்ற நியாயமுமே சர்வதேசப் பரப்பில் சிங்கள மக்களால் வைக்கப்படுகின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அவர்களுக்கான தீர்வு அவர்களது அபிலாஷைகளில் ஓரளவாக உள்ளடக்கிய அரசமைப்புச் சட்டம், சர்வதேசத்தின் பரிகார நீதியிலிருந்துதான் வர வேண்டும். அப்படியான நீதி உடனடியாக கைவந்து, கோட்டா கொண்டு வரவிருக்கும் யாப்பை மாற்றப் போவதில்லை. ஆகவே அவர்கள் செய்வதையிட்டு அதிகம் அலட்டிக் கொள்ளாமல் சர்வதேசத்தின் பரிகார நீதியை கேட்டு போராடுவதுதான் தமிழர்களுக்கு விடிவைத் தரும்.

(வளரும்.......)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை 2022 நடத்துங்கள் பார்க்கலாம்!

## எஸ்.எம். மரிக்கார் அரசுக்குச் சவால்



2022 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களை அரசாங்கம் நடத்திக் காட்டட்டும் என்று எதிர்கட்சி சவால் விடுத்துள்ளது. எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் இந்த சவாலை விடுத்துள்ளார்.

எனினும் தற்போதைய நிலைமையில் அரசாங்கம், தேர்தலை நடத்தப்போவதில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் அடுத்த வாரத்தில் கறுப்பு டொலர்களை வெள்ளை டொலர்களாக மாற்றும் செயற்பாடு இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் டொலருக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காகவே ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டுள்ளதாகவும் மரிக்கார் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நனோ நைட்ரிஜன் கொள்வனவின் மூலம் 800 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நட்டம், நாட்டின் வரி செலுத்துவோரின் பணமாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நெளுக்குளத்தில் விபத்து இருவர் படுகாயமடைவு



வவுனியா, நெளுக்குளம் – செட்டிகுளம் வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றும், ஓட்டோ ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

செட்டிகுளம் பகுதியில் இருந்து நெளுக்குளம் நோக்கி வந்த ஓட்டோ ஒன்று கூடுவெந்தபுலவு பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது வீதியில் இருந்து மறுபக்கம் திரும்ப முற்பட்ட போது ஓட்டோவின் பின்னால் வந்த மோட்டர் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் மோட்டர் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில், அம்புலன்ஸ் துணையுடன் அவர்கள் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். சம்பவ இடத்துக்கு வருகை தந்த உளுக்குளம் பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (100)

## மக்களின் நினைவு கூரும் உரிமையை அரசாங்கத்தினால் தடுக்க முடியாது

### ஶ்ரீநேசன் தெரிவிப்பு



யுத்தத்தால் உயிர்நீத்தவர்களை நினைவு கூரும் உரிமையை அரசாங்கத்தால் தொடர்ச்சியாக தடுக்க முடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஶ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தற்போதைய அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் பெரும்பான்மையினருக்கு ஒரு சட்டம். தமிழ் மக்களுக்கு ஒரு சட்டம் என்றதன் அடிப்படையில் செயற்படுவதாக ஶ்ரீநேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும், மாவீரர் தினத்தை ஜே.வி.பி. யினர் அனுஷ்டிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ் மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றால் இதனை இனவாதம் என்றே எண்ணத் தோன்றும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, மக்கள் தங்களின் மனங்களில் தங்களின் இல்லங்களில் வாழ்விடங்களில் அனுஷ்டிப்பதை அரசால் தடுக்க முடியாது என ஶ்ரீநேசன் குறிப்பிட்டுள்ளார்.

## பிரதேசசபை உறுப்பினரை மதிலில் கட்டிவைத்த மக்கள்

பாணந்துறை பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவரை பிரதேச மக்கள் பிடித்து மின்கம்பத்தில் கட்டிவைத்த பின்னர், பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அந்த பிரதேச அரசியல்வாதி, மது போதையில் பிரதேசத்தில் உள்ள மக்களுக்குத் தொந்தரவை ஏற்படுத்தும் வகையில் மோசமாக நடந்துக்கொண்டமையால், மக்கள் பிடித்து அவரை மின் கம்பத்தில் கட்டியுள்ளனர்.

வீதியோரத்தில் இருக்கும் மின் கம்பத்தில் பிரதேச சபை உறுப்பினரைக் கட்டியுள்ள பிரதேச மக்கள், பொலிஸ் அவசர அழைப்பு தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புக்கொண்டு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார், பிரதேச சபை உறுப்பினரைக் கைது செய்துள்ளனர். கைது செய்த பின்னர், அவர் மருத்துவர் ஒருவரிடம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் மது அருந்தி இருக்கின்றமை உறுதியாகியுள்ளது.

கைது செய்யப்பட்ட பாணந்துறை பிரதேச சபை உறுப்பினரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பாடசாலை மாணவர்கள் மத்தியில் புதிய டெல்ரா திரிபு பரவும் அபாயம்

புதிய டெல்டா திரிபு பாடசாலை மாணவர் மத்தியில் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கையில் அடையாளம் காணப்பட்ட டெல்டா புதிய திரிபு இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவ, மாணவியர் மத்தியில் அதிகளவு பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த டெல்ரா உப பிரிவு ஶ்ரீஜெயவர் தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வாளர்களினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பூரணமான தடுப்பூசிஏற்றிக்கொண்டவர்கள் நோய்த் தொற்று ஏற்பட்டாலும் கூடுதல் பாதிப்பிற்கு இலக்காக மாட்டார்கள் என பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

## கல்முனை வைத்தியசாலையில் பெரும் இரத்தத்துக்கு தட்டுப்பாடு

கல்முனை ஆதார வைத்தியசாலையில் பாரியளவில் இரத்தப் பற்றாக்குறை நிலவுவதாக கல்முனை ஆதார வைத்தியசாலை இரத்தவங்கியின் வைத்தியர் எஸ்.திலக்ஸி தெரிவித்தார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் நிலவும் இரத்தப்பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில் இரத்ததான முகாம்களையும் நடத்துமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கோட்டைக்கல்லாறில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரத்ததானமுகாம் ஒன்று நடத்தப்பட்டது.

கல்முனை ஆதார வைத்தியசாலை இரத்தவங்கியின் வைத்தியர் எஸ். திலக்ஸி தலைமையிலான குழுவினரால் இரத்ததானமுகாம் நடத்தப்பட்டது.

கோட்டைக்கல்லாறு சமூக உயர் கல்வி சேவைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த இரத்ததானமுகாம் கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. புலம்பெயர் மக்களின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட இரத்ததானமுகாமில் பெருமளவான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டு இரத்தம் வழங்கியமையைக் காணமுடிந்தது.

தற்போது நாட்டில் நிலவும் கொரனாத் தொற்று உள்ள சூழலில் வைத்தியசாலைகளில் பாரியளவில் இரத்தப் பற்றாக்குறை நிலவரும் நிலையில் இவ்வாறான இரத்ததான முகாம்கள் ஊடாக இரத்தப் பற்றாக்குறையை ஓரளவு நிவர்த்திசெய்யமுடியும் என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

## அரச திணைக்கள வாகனங்கள் முன்னுதாரணமாக செயற்பட்டால் நாட்டில் விபத்துக்கள் தடுக்கப்படும்

### வைத்தியர் யமுனானந்தா கோரிக்கை

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலத்தில் அதிக அளவில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனால் அதிகளவானோர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர், பலர் உயிரிழக்கி ன்றனர். அநேகமான விபத்துக்கள் வேகமான வாகனச் செலுத்துகை மூலமாகவே ஏற்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் யுத்தகாலத்தில் இராணுவ வாகனங்களே வேகமாகச் சென்றன. ஆனால் இன்று அந்தப்பணியை அரச உயரதிகாரிகளின் வாகனங்களும், யாழ். பல்கலைக்கழக வாகனங்களும், இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான வாகனங்களும் செய்கின்றன. இவ்வாறு உயர் அதிகாரம் உள்ள திணைக்கள வாகனங்கள் வீதி விதிகளை மதிக்காது வேகமாகச் செல்கின்றமை ஏனைய சாதாரண மக்களையும் அவ்வாறு வேகமாகச் செல்லத் தூண்டும்.

– இவ்வாறு தெரிவித்தார் யாழ். போதனாவைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனானந்தா.


விபத்துக்கள் தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

எமது பிரதேசத்திலுள்ள அரச நிறுவனங்கள் தங்கள் வாகனச் சாரதிகளுக்கு வீதியில் வேகக்கட்டுப்பாட்டை எவ்வாறு பேண வேண்டும் என்பதையும், மற்றையவர்களுக்கு எவ்வாறு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்பதையும் அறிவுறுத்துதல் அவசியம். யாழ்ப்பாணத்தின் வீதிகளில் 'அறிவியல்நகர்' என்ற பெயர்ப்பலகையுடன் காலையில் வேகமாகச் செல்லும் பஸ்களை நோக்கும்போது வேகத்தை எங்கே கட்டுப்படுத்துவது என்ற எண்ணம் எழத்தோன்றும். எனவே அரச வாகனங்கள் வேகக்கட்டுப்பாட்டில் முன்மாதிரியாகத் திகழ்ந்து ஏனையவர்களுக்கு வழிகாட்டல் அவசியம்.

அடுத்து வைத்தியசாலையில் காயமுற்றவர்களுக்கான அவசர சிகிச்சைக்குத் தேவைப்படும் குருதியை வழங்குவதற்கு குருதிக்கொடையை வழங்க எமது பிரதேச இளைஞர்களை ஊக்குவித்தல் அவசியம். அவ்வாறு எமது இளைஞர்கள் குருதிக் கொடைநிகழ்வுகளை ஒழுங்காகச்செய்யும் போது அவர்களிடையே சமூகப்பற்றும், சமூகப்பொறுப்பும் அதிகரிக்கும். அவர்கள் வேகமாக வாகனங்களைச் செலுத்த மாட்டார்கள். சமூக வன்முறைகளைக் கட்டுப்படுத்துவர். இதனை சனசமூக நிலையங்கள், மற்றும் சமூகத்தொண்டு நிறுவனங்கள் ஊக்குவிக்க வேண்டும்.



– என்றுள்ளது.




# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 96 ஆவது ஜனனதினம் இன்றாகும்!

எஸ்.டி.எஸ். உதயநாயகம்
பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா
( கொழும்பு) மத்திய நிலையம்.

மக்களை நல்வழிப்படுத்த உலகில் அவ்வப்போது ஞானிகளும், அவதாரப்புருஷர்களும், சித்தர்களும், மகான்களும் தோன்றுவதுண்டு. தாங்கள் அவதரித்த நோக்கம் நிறைவேறி யதுடன் மீண்டும் தாங்கள் எங்கிருந்து வந்தார் களோ அந்த இடத்துக்கு மீண்டும் சென்று விடுவது முண்டு. இவர்கள் தங்களது பிறப்பின் ரகசியம்! எங்கே? எப்போது? தோன்றுவது என்பது மட்டுமல்ல, தங்களது வாழ்வின் இறுதிநாளையும் அறிந்து வைத்திருப்பார்கள். அப்படிப்பட்டவர்தான். நாம் வாழ்ந்த காலத்தில் தோன்றிய, கண்கண்ட ஓர் அவதார சித்தர், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா. இவரது 96 ஆவது ஜனனதினம் நவம்பர் 23ம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது.

எத்தனையோ அவதாரங்கள் மனிதர்களாகத் தோன்றி மறைந்தாலும். அதில் ஒரு சிலர்தான் ராமனாகவும் கிருஷ்ணனாகவும் பக்தர்களின் இத



யங்களில் நிலைத்துநிற்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அந்த அவதாரங்கள் மானிடசேவையாக சாதனைகள் புரிந்துவிட்டால், அவர்களை தெய்வத்துக்கு ஈடாக வணங்குவதுண்டு. அதைத்தான் மனிதனும் தெய்வமாகலாம் என்பார்கள். அப்படிப் பட்ட மகான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் புகழும். அவரது சாதனைகளும் இன்றும் பேசப்படுகின்றன.


1975 மே மாதம் 25 ஆம் திகதி சேவாதள மகாநாட்டில் பகவான் சத்ய சாயி பாபா பேசுகையில் , 'ஒரு சிலர் தம்வழியே சுவாமி செயற்படுவதாகவோ, சுவாமியிடமிருந்து கட்டளைகள் கிடைப்பதாகவோ கூறிக்கொண்டு சில வேடிக்கையான தந்திரங்களைச் செய்யும்போது, நமது சேவாதள தொண்டர்கள் அங்கு சென்று அவர்களை ஊக்குவிக்கிறார்கள். பகவானிடம் நேரடித் தொடர்பு இருக்கும்போது இத்தகைய 'டூப்ளிக்கேட் சுவாமிகளின்' தேவை எங்குள்ளது என்றும், 1965 மார்ச் 25 ஆம் திகதி தனது அருளுரையில், 'நான் இன்னொருவர் மூலம் பேசுவதில்லை, இன்னொருவர் உடலில் புகுவதில்லை, நான் பேச இன்னொருவரை ஊடகமாகப்பயன்படுத்துவதில்லை. நான் நேரில் நானாகவே வந்து உங்களுக்கு அமைதியும் ஆனந்தமும் தருவேன் என்றும் கூறினார்.

பகவான் சாயி மார்க்கத்தை நிறுவி, அதன் மூலமாக மதமாற்றங்களை ஏற்படுத்தியது கிடையாது. சர்வமதங்களையும் நேசித்தவர். அவரவர் மதங்களிலிருந்தபடி அவரவர் இஷ்டதெய்வங்களை வணங்கும்படி உபதேசித்த ஒரு மகான் இவராகத்தான் இருக்கமுடியும். ஆனால் ஆன்மீக ஒழுங்கு கட்டுப்பாடுகளை, ஒழுக்கமான வழிபாடுகளை, மனிதநேயத்தை, சகோதரத்துவத்தையும் மற்ற மதத்தவர்களையும் அவர்களது தெய்வங்களையும் மதிக்கும் பண்புகளையும் போதித்தவர். அதனால் தான் சாயி மார்க்கம் நின்று நிலைத்து நிற்கிறது.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம், கொழும்பில் அகவை 55 ஐக் கண்டிருக்கிறது.

'ஒரு குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக, இந்த உடம்பு மக்களிடயே தோன்ற சங்கல்பிக்கப் பட்டது. விளம்பரப்படுத்துவதில் எனக்கு சிறிதும் ஆர்வமில்லை. உங்களுக்காக உங்கள் இதயத்தில் குடிகொண்டுள்ளதை எந்த நாளில் உணர்கிறீர்களோ அந்த நாளையே நீங்கள் என் பிறந்தநாளாகக் கொண்டாட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்' என்று பாபா 1978 ஆம் ஆண்டு ஒரு பிறந்தநாள் விழாவில் கூறியிருந்தார்.

இந்த 96 ஆவது வயது, ஒரு முக்கியத்துவம் வாய்ந்தது. பகவான் தன் திருவாயால், தனது அவதார வாழ்வை 96 ஆம் திருவயதில் நிறைவு செய்வேன் என உறுதி அளித்திருந்தார். ஆனால் அதற்கு முன்பாகவே தனது தேகத்தை விட்டுப் பிரிந்தார். ஏன்? எதற்காக? சாயி பக்தர்களின் மனங்களை ஆதங்கப்படுத்த, 'சுவாமி விரைவில் திரும்பி வருவார், அதனால்தான் விரைவாகச் சென்றுவிட்டார்' என்று வாழும் கலை மகான் ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர் குருதேவ் பதிவுசெய்திருந்தார்.



பகவானின் ஒவ்வொரு செயல்களுக்கும் பல அர்த்தங்கள் உண்டு. ஆனால் அதனை ஆராயமுடியாது. அதன் பலாபலன்களை பின்னர் உணர முடியும். இவரது முன்னைய அவதாரமாகிய கண்ணன் செய்த சூழ்ச்சிகளும், இராமர் வாலியை வதம் செய்த முறையையும் ஆராய்ந்தால். அந்த அந்த இதிகாசங்களைச் சுவைக்கமுடியாது. பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அந்தச் சம்பவங்களை ஜீரணித்துதான் ஆகவேண்டும். அதனால் இறுதியில் கிடைத்தது அர்த்தமுள்ள ஆன்மீகத் தத்துவங்களே!! சீரடி சாயி பாபாவின் வாழ்க்கைச் சரித்திர ரகசியத்தை புட்டு புட்டு வைத்தவர், அவரது மறு அவதாரமான சத்ய சாயி பாபாதான். அதுபோன்று சத்ய சாயிபாபாவின் 96 ஆவது வயதின் தெய்வச்செயலை வெளிப்படுத்த, அடுத்து மறு பிறவியெடுத்து வரவிருக்கிறார் பிரேமசாயி.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய (கொழும்பு) நிலையம் ஏற்பாட்டில், இன்று நவம்பர் 23 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 96 ஆவது பிறந்தநாள், கொழும்பு புதுச் செட்டித் தெருவிலுள்ள, சாயி நிலையத்தில், காலை 5 மணி தொடக்கம் பகல் ஆராத்தி வரை சுகாதார ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் நடைபெறவுள்ளது. சிறப்பு அம்சமாக பிறந்தநாள் கேக் வெட்டுதல், திருவுஞ்சல், திரிமங்களாராத்தியும் இடம்பெறும்.



# காலைக்கதிருக்காக கானமயில்நாதன் செய்த பிரதிக்ஞை!

**‘காலைக்கதிர்’ நாளிதழ் 06.11.2016 அன்று மலர்கின்றமையை ஒட்டி அதற்கு முதல் நாள் மாலையில் ‘விடியல் வீச்சு!’ சிறப்பிதழ் வெளியீடு இடம்பெற்றது. அந்த இதழின் முன்பக்கத்தில் ‘நமது பிரதிக்ஞை’ என்ற பெயரில் காலைக்கதிரின் நோக்கங்களை வடிவமைத்து வெளியிட்டிருந்தார் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன். அது அவரது பெயருடன் பிரசுரமாகியிருந்தது. அவர் மறைந்த இந்தச் சமயத்தில் அதனை மீள நினைவூட்டுவது பொருத்தமானது. அது இங்கு அப்படியே பிரசுரமாகின்றது.**

ஆதவனே அகிலநாயகன்.அவனின்றி அசையாது அவனி. அவனே உலக காரணன். அணுவில் இருந்து அண்டம் வரை அனைத்துக்கும் உயிரூட்டுபவனும்அவனே.தன்பொற்கிரணங்களால் நானிலத்தைச் செழுமைப்படுத்தும் பெருமை வெய்யோனுக்கே உரியது.

பரிதியின் கதிர்கள் பூமிப்பந்தில் சக்தியைப் பதிக்க வழி செய்கின்றன. கதிரவனின் அந்தச் சக்தியை உள்வாங்கி அமுதுக் கதிராகத் தந்து நிமிர்கின்றன நெற்பயிர்கள்,

கதிரவனின் கதிர்கள் போன்று – களனியிலே பூரித்துத் தலை சாய்க்கும் நெற்கதிர்கள் போன்று – இன்று உங்கள் கரம் தவழ்கிறது ‘காலைக்கதிர்’.

தங்குதடையின்றி – காலகதி பிசகாமல் – காலைக் கதிரவனின் கதிர்கள் பார் மீது பரவுவது போல, ‘காலைக்கதிரும்’ நாளாந்தம் தவறாமல் விடிகாலையில் உங்களை நாடிவரும்.

இன்று உலகின் இயக்கமே கதிர்கள்தாம். கண்ணுக்குத் தெரியும் ஒளிக்கதிர் மட்டுமல்ல, நாம் தொட்டுப் பட்டுணரும் வெப்பக்கதிர் மட்டுமல்ல, நம் கண்களுக்குப் புலனாகாத – உணர்வுகளால் உணர முடியாத – பலவிதமான கதிர்கள், பல அலை வீச்சுங்களில் விண்ணுலக அண்டத்தின் விசாலந்தொட்டு, நுண்ணுலக அணுவின் மூலம்வரை, நம்மைச் சூழப் பரவியா பித்து – நின்று, இன்று உலகையே இயக்கிக் கொண்டிருக்கின்றன என்பதே விஞ்ஞான மெய்ம்மை. வெளியே புலனாகாமல், மனித பிரக்ஞைக்குத்தோற்றாமல், சூட்சுமமாகச்செயற்படும் கதிர்கள் போன்று உங்களின் ’காலைக்கதிரும்’ தன்னைப் பிரபலப்படுத்தாமல், அதிகப்பிரசங்கித்தனமோ, ஆர வாரமோ இல்லாமல், அமைதியாக, அரிய காரியங்களை அதற்கே உரித்தான தனித்துவத்துடன் ஆற்றுமென இந்த உதய வேளையில் உறுதி கூறுகின்றோம். பத்திரிகை காலத்தின் கண்ணாடி. ஒரு கருத்துருவாக்கி. அதற்கு அபாரமான சக்தி உண்டு. வாசகனின் ஆன்மாவைப் பற்றி, அவனை ஆகர்ஷித்து, நெறிப்படுத்தும் வழிகாட்டி அதுவே. வாசகனின் இருண்ட மனக் குகைக்குள் வெளிச்சத்தைப் பாய்ச்சி, மாயையைப் போக்கி, கனவுகளைக் கலைத்து, யதார்த்தத்தை விளக்கி, சிந்தனை, விழிப்புணர்வைத் தூண்டி, நம்பிக்கையை வளர்த்து நெறிப்படுத்தும் நல்லாசானும் அதுவே.



ஆசிரிய பீட அங்குரார்ப்பணத்தின் பின்னர் காலைக்கதிர் குடும்பத்தின் நடுநாய கமாக நம் ஸ்தாபக ஆசிரியர்.



’காலைக்கதிர்’ மலர்வினை ஒட்டிய ’விடியல் வீச்சு!’ நாளிதழை அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் வெளியிட, வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முதல் பிரதியைப் பெறுகின்றார். அருகில் ’காலைக்கதிர்’ நாளிதழின் ஸ்தாபக ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன்.

சமூகப் பிரக்ஞையுடனும், இனவுணர்வுடனும் தனது மக்களின் சமூக விடுதலைக்காகக் கிளர்ந்தெழும் ஒரு பத்திரிகை, தனது மக்களின் – தனது சமூகத்தின் – இருப்புக்கே கவசமாகவும் காவலனாகவும் உயர்கின்றது. அந்த அரும் பணியே காலைக்கதிரின் பிரதான இலக்கு. ஈழத் தமிழினத்தின் ஏழு தசாப்தகால உரிமைப் போராட்டமும் அதற்காக அந்த இனம் செய்த – புரிந்த – வேள்வித் தவமும் சொற்களில் அடக்கிவிட முடியாத உயரிய தியாகமும் அவமாகிப் போகாமல் அர்த்த முள்ளனவாக வேண்டும்.

அதற்காக உரத்துக் குரல் கொடுக்கும் அதே சமயத்தில், உரிமைப் போரில் ஆகுதியானோரின் வேள்வித் தீயில் சுயநலவாதிகள் பலர் அரசியல் குளிர்காய் வதையும் காலைக்கதிர் உரிய முறையில் பிய்த்து, பிளந்து அம்பலப்படுத்தும்.

’’உண்மை – நேர்மை – பக்கம் சாராமை’ என்ற தாரக மந்திரத்தை வரித்துக்கொண்டு, ஒரு புதிய – நீதிநாடி – நேரிய – சீரிய – ஊடக தர்மத்தைத் தனது பாதையாக வகுத்துக்கொண்டு, நமது இனத்தின் விடிவுக்காகவும், உயர்ந்த சமூக மாற்றத்துக்காகவும் இன, மத நல்லிணக்கத்துக்காகவும் அர்ப்பணிக்கும் வகையில் காலைக்கதிர்’ தளராது பணி யாற்றும் என்று இந்த உயிர்ப்பு வேளையில் பிரதிக்ஞை செய்கின்றோம்.



’காலைக்கதிர்’ ஆசிரியர் பீட அங்குரார்ப்பணத்தின் போது பத்திரிகையின் சார்பில் சங்கற்பிக்கும் கானமயில்நாதன் தம்பதியர்.

**ம.வ.கானமயில்நாதன்**
**பிரதம ஆசிரியர்.**


# ‘காலைக்கதிரில்’ கானம் எனும் காவியம்



ஆசிரியர்பணியில்கானமயில்நாதன்



அங்குரார்ப்பணத்தின்போது ஆசிரியர்கள் ஆலோசனை



ஆரவாரமின்றி அரும்பணியாற்றிய பெருந்தகை



யாழ். ஊடக அமையத்தில் கௌரவிக்கப்பட்டபோது...



‘விடியல் வீச்சு’ வெளியீட்டில்...



அங்குரார்ப்பணத்தின்பின் ஸ்தாபக ஆசிரியரும் அவர் அணியினரும்

# அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் அரும்பாணியாற்றிய ஆசிரியர்!

## ஊடக அமையம் கண்ணீர்க் காணிக்கை

அச்சுறுத்தல்களால் அடிபணிய வைக்கலாமென்று பலரும் எதிர்பார்த்திருந்த போதும் தனது ஒற்றை பேனாவின் முனையை நம்பி கொலை வாளின் கீழாக ஊடகப்பணியாற்றியவர் ம.வ.கானமயில்நாதன் என யாழ் ஊடக அமையம் கண்ணீர் காணிக்கையை அறிக்கையாக வெளியிட்டுள்ளது.

மூத்த ஊடகவியலாளர் ம.வ.கானமயில்நாதன் இன்று திங்கட்கிழமை தனது 79ஆவது வயதில் காலமானதையிட்டு யாழ் ஊடக அமையம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு வடிவம் வருமாறு:-

ஈழ விடுதலைப் போராட்டத்தின் சத்தமற்ற ஊடக சாட்சியங்களுள் ஒன்றாக இருந்து மறைந்த மூத்த ஊடகவியலாளர் ம.வ.கானமயில்நாதன் அவர்களிற்கு யாழ்.ஊடக அமையம் தனது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

ஊடகப் பரப்பில் உரிமை கோரப்படாத மரணங்களும் காணாமல் ஆக்கப்படுதல்களும் அச்சுறுத்தல்களும் நிரம்பி வழிந்த யாழ்ப்பாண மண்ணில் சோரம் போகாது தனது ஊடகப் பணியை உதயன் நாளிதழில் அதன் பிரதம ஆசிரியராக இருந்து ஆற்றியவர் ம.வ.கானமயில்நாதன்.

அச்சுறுத்தல்களால் அடிபணிய வைக்கலாமென்று பலரும் எதிர்பார்த்திருந்த போதும் தனது ஒற்றை பேனாவின் முனையை நம்பி, கொலைவாளின் கீழாக ஊடகப்பணியாற்றியவர் ம.வ.கானமயில்நாதன். தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்ட பரப்பில் ஊடக பங்களிப்பு பற்றிய பதிவுகளில் என்றுமே விலக்கப்பட முடியாத சக்திகளுள் ஒருவராக அவர் இருந்து வந்திருந்தார். அவரது ஊடகப்பள்ளியில் புடம் போடப்பட்ட நூற்றுக் கணக்கான ஊடகவியலாளர்கள் உலகெங்கும் நிரம்பிப்போயுள்ளனர்.

2005இன் பிற்பகுதியில் ஜனநாயகம் பேசுகின்ற துப்பாக்கிதாரர்களது கொலை கரங் களில் இருந்து தப்பிக்க அவர் வருடக் கணக்கில் தனது அலுவலகத்தினுள்ளேயே முடங்கிக்கிடந்தமையும் நாள் தோறும் உதயன் நாளிதழை வெளிக்கொணர்ந்தமையுமான வரலாறுகள் இளம் ஊடக சமூகம் கற்றுக்கொள்ளவேண்டியதொன்று.

உதயனில் வெளிவந்த ஆசிரிய தலையங்களை வாசித்தே இதனை கானத்தார் தான் எழுதியதாக அடித்துச்சொன்ன தேசிய தலைமை பற்றி அவருக்கு என்றுமே பெருமையும் புளங்காகிதமுமுண்டு.

உதயன் பத்திரிகை 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட முதல் தனது வாழ்வின் இறுதிக்காலம் வரையில் நீண்ட காலம் பிரதம ஆசிரியராக கடமையாற்றியுள்ளமை ஒரு வரலாற்றுப் பதிவே.

நெருக்கடியான கால கட்டத்தில் தாயகத்தில் இருந்து ஊடகப்பணியாற்றிய மிக சொற்ப அளவிலான மூத்த ஊடகவியலாளர்களுக்குள் கானமயில்நாதனும் ஒருவர்.

பிரான்ஸின் தலைநகரான பரிஸில் கடந்த 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதியன்று எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் தன்னார்வ அமைப்பின் விருது வழங்கும் விழாவில், விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அதேவேளை ஊடகத்துறையில் தேசியம் சார்ந்து நெருக்கடியாக சூழலில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியமைக்காக கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி யாழ்.ஊடக அமையத்தினால் அவர்வாழும்போதேகௌரவிக்கப்பட்டமையினை பெருமையுடன் நினைவுகூர்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் பிரிவால் துயருற்றிருக்கின்ற குடும்பத்தவர்களிற்கு ஆறுதலையும் யாழ்.ஊடக அமையம் தெரிவித்து நிற்






# மரண அறிவித்தல்

மலர்வு
25 . 07 . 1942



உதிர்வு
22 . 11 . 2021

## அமரர்

# மருதப்பு வல்லிபுரம் கானமயில்நாதன்

**(ஓய்வுபெற்ற பிரதம ஆசிரியர் -
உதயன் - சஞ்சீவி மற்றும் காலைக்கதிர் பத்திரிகைகள்)**

வட்டு. மேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், 495/14, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ம.வ. கானமயில்நாதன் 22.11.2021 அதிகாலை மாவைக் கந்தனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதப்பு - செல்லம் தம்பதிகள், சண்முகம் - அரியக்குட்டி தம்பதிகளின் பேரனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளியம்மை தம்பதிகளின் தவப்புதல்வனும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - மெல்லியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சாரதாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற விமலாதேவி மற்றும் பகீரதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தயாநாதனின் (ஜேர்மனி) மைத்துனரும், லோகதாசன், தருசினி, கதீஜா ஆகியோரின் தாய்மாமனும், வளர்ப்புத் தந்தையும் காயத்திரி, மணிவண்ணன், கோணேஸ்வரன் ஆகியோரின் பெரியதந்தையும் காலஞ்சென்றவர்கவர்களான அமரர், கஜீன்ந்த் மற்றும் சஞ்யிதா, கிசாந்த், சாகரி, சாரணி, மதுரிகா, லுயிசன், கபிசாந்த், தக்சினி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற கண்மணி மற்றும் நவமணி, காலஞ்சென்ற பராசக்தி மற்றும் வைத்தியநாதன் , காலஞ்சென்ற தேம்பாமலர் மற்றும் பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (23.11.2021) காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள் கிறோம்.

**தொடர்புகளிற்கு:-**

தயாநாதன் (ஜேர்மனி) - 004971150456347
லோகதாசன் (சுவிஸ்) - 0041797437993
அன்புரு ( இலங்கை) - 0094775002337
தருசினி (சுவிஸ்) - 0041766666663
கதீஜா (ஜேர்மனி) - 00491766162864

**தகவல் :
குடும்பத்தினர்**

# மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுகின்றார் ஞானசார தேரர்

## சிறிதரன் எம்.பி. காட்டம்



விளக்கேற்றக் கேட்கும் தமிழ் அரசியல்வாதிகள் போதைப்பொருளைத் தடுப்பதற்குத் தயாராக இல்லை எனவும், நாடாளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதிகள் என்ன செய்கின்றார்கள் என கலகொட அத்தே ஞான சார தேரர் தெரிவித்த கருத்து மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாக அமைந்துள் ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறி தரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணியின் தலைவர் தெரிவித்த கருத்து தொடர்பில் கருத்துரைக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் -

நீதிமன்றத்தை மதிக்கத் தெரியாது, இந்த நாட்டின் நீதித்துறையையே அவமதித்த மிலேச்சத்தனமான இனவாதியான ஞானசார தேரர், போதைப்பொருள் ஒழிப்பு குறித்துப் பேசுகின்றமை நகைப்புக்கிடமானதாக உள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கு, கிழக்கில் 2009 ஆம் ஆண்டுவரை போதைப்பொருள், கஞ்சா, ஹெரோயின் என்ற சொற்பதங்களையே அறி யாதவர்களாகத்தான் தமிழ் இளைஞர்கள் இருந்தார்கள். அந்தளவுக்குத் தனிமனித ஒழுக்கத்துக்கு விடுதலைப் புலிகள் முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

அத்தகைய கட்டமைக்கப்பட்ட ஒழுக்க விதிகளுக்கு உட்பட்டு வாழ்ந்த தமிழ் இளைஞர்களைத் திட்டமிட்டுத் திசைதிருப்பும் நோக்கோடு, இன அழிப்பின் இன்னோர் வடிவமாக, அவர்களைப் போதைக்கு அடிமையாக்கி இனத்தைச் சீரழிக்கும் கைங்கரியத்தை திட்டமிட்ட வகையில் கையாளும் ஞானசாரதேரர் போன்றோர் போதைப்பொருள் தடுப்புக் குறித்து பேசுவதும், அதனோடு மாவீரர்களை நினைவேந்துவதை ஒப்புநோக்குவதும் பொருந்தாத செயலாகும்.

மாவீரர்களை நினைவேந்துவது தமிழர்களின் உயிர்ப்போடும், உணர்வோடும், கலாசார மரபியல்புக ளோடும் இரண்டறக் கலந்த நிகழ்வு. அந்த நினைவேந்த லுக்கான உரிமை மறுக்கப்படுகின்றபோது அதற்கெதி ராக குரல் கொடுப்பதென்பது தன்னியல்பு.

எமது உரிமைக் கோரிக்கைக்குச் செவிசாய்க்கவே தயாராயில்லாத, எந்நேரமும் இனவாதத்தைக் கக்கும் ஞானசாரதேரரின் இத்தகைய கருத்து, அதிலும் குறிப் பாக மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாளில் அவர் தெரிவித் துள்ள இந்தக் கருத்து தமிழர்களின் உணர்வுகளைச் சீண்டிப்பார்ப்பதாகவே அமைந்துள்ளது.

தென்னிலங்கையிலிருந்த தமிழர்களின் தொல்லி யல் அடையாளங்களை இடித்தழித்துவிட்டு, தமிழர்க ளின் பூர்வீக நிலங்களான வெடுக்கு நாறி மலையிலும், குருந்தூர் மலையிலும், உருத்திரபுரீஸ்வரத்திலும் பௌத்த சிங்கள அடையாளங்களை நிறுவுவதற்காகக் கங்கணம் கட்டி நிற்கும் ஞானசார தேரரை 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணியின் தலைவராக நியமித்தமை இந்த நாட்டுக்கே அவமானம்.

அந்த நியமனமே இலங்கை அரசின் இனவாத முகத்தை எண்பிப்பதற்கு போதுமான சாட்சியம் ஆகும். நாட்டின் நீதித்துறைக்குக் கட்டுப்பட்டு நடக்கத் தெரியாத ஞானசார தேரருக்கு மாவீரர்களை நினைவேந்துவது குறித்தோ, தமிழ் அரசியல்வாதிகள் குறித்தோ கருத்து ரைப்பதற்கு எந்த அருகதையும் இல்லை எனத் தெரி வித்துள்ளார்.

# அரசாங்கத்தை விமர்சிக்க அரச ஊழியருக்குத் தடை!

சமகால அரசாங்கத்தை விமர்ச் சிக்க அரசாங்க ஊழியர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித் துள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் சகல அரசாங்க திணைக்களங்கள் மற் றும் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களின் மூலம் அரசாங்கத்தையும் அதன் கொள்கை களையும் பலர் விமர்ச்சித்துவரு கின்றனர் என கிடைத்த முறைப் பாட்டுக்கு அமைய இந்தத் தடை உத் தரவு அமைச்சால் பிறப்பிக்கப்பட் டுள்ளது.

பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்கள், அபிவிருத்தி உத்தியோகத் தர்கள் உள்ளிட்டோர் சமூக ஊடகங் களைப் பயன்படுத்தி அரசாங்கத்தை யும் அதன் கொள்கைகளையும் விமர் சிக்கின்றனர் என எழுந்த முறைப்பாடு களையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் வெளியிட்ட சுற்றறிக் கையில் குறிப்பிட்டுள்ளார்.

# யுத்தகாலத்தில் துணிந்து செய்தி சொன்னவர் மூத்த பத்திரிகையாளர் கானமயில்நாதன்

## ஆறு.திருமுருகன் இரங்கல்



பலதுறை ஆற்றல் மிக்க பத்திராதி பரை எம் மண் இழந்து விட்டது.

சமய விடயங்கள் முதல் அரசியல் வரை ஆராய்ந்து செய்தி வழங்கிய பத்திரிகையாளன், எவருக்கும் அஞ்சாது தனது கருத்துக்களை ஆசி ரியர் குறிப்பில் வெளிப்படுத்தி வந் தவர்.

- இவ்வாறு தனது இரங்கல் செய் தியில் தெரிவித்துள்ளார் துர்க்கா தேவி தேவஸ்தானம் மற்றும் சிவ பூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுரு கன்.

அவரது இரங்கலுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வரு மாறு -

ஈழநாடு, தினபதி, உதயன், சஞ் சீவி, காலைக்கதிர் பத்திரிகைகளில் அரிய பணியாற்றிய சேவையா ளனை எவரும் மறந்து விட முடி யாது.

போர்ச்சூழலில் ஆபத்தான கட டங்களில் கூட மக்களுக்குத் துணிந்து செய்தி சொன்ன மகத்தான மனிதன்.

வைத்தியசாலையில் குற்றுயி ராக இருந்து பின் தப்பிப் பிழைத்து சுவிஸ் நாட்டுக்குச் சென்றவர் அங்கு வாழ விருப்பமின்றி தன் பத்திரி கைப் பணி தொடர்வதற்காக சலுகை களைத் துறந்து, தாயகம் வந்து பணி தொடர்ந்தவர்.

இன்றைய இளம் பத்திரிகை யாளர் பலருக்கு குருவாக விளங்கி ஆற்றுப்படுத்தியவர். மும்மொழிப் புலமைமிக்க பத்திராதிபர். அன்னா ரின் உள்ளம் புனிதமானது என் பதை அவரோடு பழகிய அனைவ ரும் அறிவர். ஈழத்து பத்திரிகை வர லாற்றில் இவரது நாமம் நிலை பெறும். அன்னாரின் ஆத்மா சாந்தி பெறத் துர்க்கை அம்பாளை வேண் டுகின்றேன். - என்றுள்ளது.

# பேச்சு சுதந்திரத்தை எம்.பிக்கள் தவறாகப் பயன்படுத்துகின்றனர்!

## சபாநாயகர் அறிவுரை

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பேச்சு சுதந்திரத்தை சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவறாகப் பயன்படுத்தி கருத்துக்களை வெளியிட்டு வருவதன் மூலம் தமக்கு வாக்களித்த மக் களுக்கு அகௌரவத்தை ஏற்படுத்தி வரு கின்றனர் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். இது தொடர் பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பி னர்கள் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் எதிர்ப்பை வெளியிடுகின்றமை பொருத்த மானது மற்றும் நியாயமானது என நினைத் தாலும் நாடு அதனை ஏற்றுக்கொள்ளாது.

இதன்மூலம் நாடாளுமன்ற உறுப்பி னர்களின் கௌரவத்துக்கே பாதிப்பு ஏற்படுகி றது.

அண்மைய காலமாக எதிர்ப்பு வாசகங் கள் அடங்கிய பதாகைகளைக் காட்சிப்படுத்தி, நாடாளுமன்றத்தில் தவறான நடத்தையை வெளிக்காட்டும் சந்தர்ப்பங்கள் அதிகரித் துள்ளன.

சட்டங்களை கொண்டு வந்து இவற்றை கட்டுப்படுத்த எந்த எண்ணமும் இல்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர் தன குறிப்பிட்டுள்ளார்.

# சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நிதி

## அனந்தி சசிதரன் சாடல்



காணாமல் ஆக்கப்பட்டோர் விவகா ரத்தில் பொறுப்புக்கூறலைப் புறந்தள் ளும் அரசாங்கம், சர்வதேசத்தை ஏமாற்றும் நோக்கிலேயே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு 30கோடிரூபாவை ஒதுக்கியுள்ளதாக முன்னாள் வட மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாங்கள் கேட்பது, சரண டைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக பூர்வாங்க விசாரணை யொன்றை சர்வதேச மத்தியஸ்துடன் செய்யவேண்டும் என்பதே ஆகும் என அனந்தி சசிதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, அரசாங்கம் பொறுப்புக் கூறலை இதயசுத்தியுடன் செய்வதற் குத் தயாராக வேண்டும் என்பதுடன் மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் எனவும் அவர் வலி யுறுத்தியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## சாவகச்சேரி, மல்லாகம், பருத்தித்துறை நீதிமன்றங்களால்

# மாவீரர் நிகழ்வுக்குத் தடை உத்தரவு கோரும் விண்ணப்பங்கள் தள்ளுபடி

### 13 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு ஏமாற்றம்

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக்கக் கோரி பொலிஸாரால் முன்வைக் கப்பட்ட விண்ணப்பங்களை சாவகச்சேரி, மல்லாகம் மற்றும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றங்கள் நேற்று தள்ளுபடி செய்து கட்டளையிட்டன.

விண்ணப்பங்களில் பிரதிவாதிகளினால் குறிப்பிடப்பட்டுள்ளோர் குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை மற்றும் கொரோனா தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி செயற்பட்டால் நடவடிக்கை எடுக்க முடியும். எனினும், குற்றமிழைக் கப்படலாம் என்ற அடிப்படையில் தடை உத்தரவு கட்டளை வழங்க முடியாது என்று விண்ணப்பங்கள் நீதிவான் நீதிமன்றங்களால் தள்ளுபடி செய்யப்பட்டன.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட இரண்டு பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மல்லாகம் நீதிவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட 8 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற எல்லையிலுள்ள 3 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளால் இந்த விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப் பட்டிருந்தன.

குற்றவியல் நடவடிக்கை சட்டத்துக்கு அமைவாகவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் படியும், இந்த நிகழ்வை நடத்துவது குற்றம் என்றும், இதனைத் தடை செய்யுமாறும் பொலிஸார் கோரியிருந்தனர்.

தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பொதுமக்களை அணிதிரட்ட முடியாது என்றும் பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர்

விண்ணப்பங்களின் பிரதிவாதிகளாக அரசியல் கட்சி பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமகன்கள் சிலர் பெயரிடப்பட்டிருந்தனர்.

இந்த விண்ணப்பங்களின் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு நேற்று பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன

மாவீரர் நாள் நினைவேந்தலை அனுமதித்தால் பெரும் ஆபத்து என்று பொலிஸார் சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணிகள் பொலிஸாரின் விண்ணப்பங்கள் அடிப்படையற்றவை என்றும், மன்று தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் சமர்ப்பணங்களை முன் வைத்தனர்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதிமன்றங்கள், குற்றவியல் நடவடிக்கை சட்டம் மற்றும் தனிமைப் படுத்தல் சட்டம் மீறப்பட்டால் நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளது என்று சுட்டிக்காட்டி விண்ணப்பங்களை நிராகரித்தன.

## ஐந்து விபத்துக்களில் ஐவர் பரிதாபச் சாவு!

நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற 5 விபத்துக்களில் ஐவர் மரணமடைந்தனர் என்று பொலிஸ் தலைமையகம் இன்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக மாத்தறை, தெனியாய பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி சென்று வடிகானொன்றில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநரும் மோட்டார் சைக்கிளின் பின்னால் பயணித்த நபரும் தெனியாய வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டபோது மோட்டார் சைக்கிள் செலுத்துநர் மரணமடைந்தார். கோட்ட பொல பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயது நபரே இவ்வாறு மரணமடைந்தார்.

இரத்தினபுரி பெல்மடுல்ல வீதி, பாத்த கொட பிரதேசத்தில் லொறியொன்று மற்றுமொரு லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஒரு லொறியின் சாரதி படுகாயமடைந்த நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். கடவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயது நபரே உயிரிழந்தார்.

இதேவேளை, மாத்தளை - கண்டி வீதி, வரக்காமுர பிரதேசத்தில் கண்டி நோக்கிப் பயணித்த வானொன்று வேகக்கட்டுப் பாட்டை இழந்து கொங்ரீட் தூண் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த வானின் சாரதி, மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது மரணமடைந்தார். வரக்காமுர பிரதேசத்தைச்சேர்ந்த 40 வயது நபரே உயிரிழந்தார்.

மாத்தறை, திஹகொட பொலிஸ் பிரிவு, ஹக்மன வீதி நாதுகல பிரதேசத்தில் மாத்தறை நோக்கிப் பயணித்த ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் பாதசாரி பெண்ணொருவர் மீது மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதி மற்றும் பாதசாரி பெண் ஆகியோர் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப் படும்போது ஓட்டோ சாரதி மரணமடைந்தார். நாமின பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயது நபரே உயிரிழந்தார்.

கேகாலை, ருவன்வெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரக்காபொல கரவனெல்ல வீதியில் வரக்காபொல நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸொன்று பாதசாரி பெண்ணொருவர் மீது மோதியுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த பெண், கரவனெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். ரூவன்வெல பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயது நபரே உயிரிழந்தார்.

## வேலணையில் சகதிக்குள் சிக்கியுள்ள மாணவர்கள்!

### விபத்துக்களும் அதிகரிப்பு



யாழ்., வேலணை - சரவணைப் பகுதியில் வீதி சகதியாகக் காணப்படுவதால் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

சரவணை - ஊர்காவற்துறை வீதி புணரமைப்பு வேலைகள் நடைபெற்று வரும் வேளையில், புனரமைப்புப் பணிக்காக வீதியில் போடப்பட்ட மண், மழை காரணமாக சகதியாக மாறியுள்ளது.

இதனால் அப்பகுதியில் பயணிப்பவர்கள் கடும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட நடந்து செல்வோர் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதேவேளை, வீதியில் சைக்கிள், மோட்டார் சைக்கிளில் செல்பவர்களும் சகதிக்குள் சிக்கி விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே, விரைந்து புனரமைப்புப் பணிகளை முடிக்குமாறும், இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துமாறும் அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

## சடலம் மீட்பு

சந்தேகத்துக்கிடமான முறையில் மரணமடைந்த ஆண் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கேகாலை, புளத்கொஹூப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிக் கொட பிரதேசத்தில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது

ஹிக்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது நபரின் சடலமே இவ்வாறு மீட்கப் பட்டுள்ளது.

பிரதேசமக்கள்பொலிஸாருக்குவழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்தபொலிஸார்சடலத்தைமீட்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக கேகாலை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் புளத்கொஹூப்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியா மேலதிக அரச அதிபருக்கு கொரோனா உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபருக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் அவர் நேற்று முன்னெடுத்து துரித அன்டிஜன் பரி சோத னையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர் சிகிச்சைக்காகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையுடன், அவருடன் தொடர்புடையவர்களையும் தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (100)

## ஆசிரியரைத் தாக்கிவிட்டு தப்பியோடிய மாணவர்கள்

ஆசிரியர் ஒருவரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டு மாணவர்களான சிறுமியும், சிறுவனும் தப்பியோடிய சம்பவம் காலி, போத்தல - காசிதெனிய பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

ஆசிரியரின் வீட்டுக்கு ஓட்டோவில் சென்ற 16 வயதுடைய சிறுமியும், சிறுவனொருவனும் நேற்றிரவு ஆசிரியரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனபி போத்தல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பத்தேகம புனித அந்தோனியார் கல்லூரியில் கடமையாற்றும் 45 வயதுடைய ஆசிரியரே இவ்வாறு காயங்களுடன் பத்தேகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

காயமடைந்த ஆசிரியர், மேற்படி சிறுமியின் தாயாருடன் தகாத உறவைப் பேணி வந்துள்ளார் எனவும், இது தொடர்பில் ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று வின வியபோது ஏற்பட்ட வாக்குவாதத்தில் குறித்த சிறுமி ஆசிரியரைக் கூரிய ஆயு தத்தால் தாக்கியுள்ளார் எனவும் விசார ணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் போத்தல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## முல்லைத்தீவில் 2 பேர் கொரோனாவால் சாவு

முல்லைத்தீவுமாவட்டத்தில்கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட 44 வயதுடைய மாறா இலுப்பை, நெடுங்கேணியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

சிறுநீராக நோயால் பாதிக்கப்பட்ட இவர் கொரோனாத் தொற்று ஏற்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவரின் உடலம் கொரோனா விதிமுறைகளுக்கு அமைய எரியூட்டுவதற்காக நேற்று வவுனியா, பூந்தோட்டம் மின் தகன மேடைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கூழாமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய முருகன் கோபால் என்பவரும் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார்

இவரின் உடலமும் எரியூட்டுவதற்காக வவுனியா, பூந்தோட்டம் மின் தகன மேடைக்கு நேற்று எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் இதுவரை 55 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.11.2021 இல் வெளியிடப்பெற்றது.